# சீமைக் குரல்
# VOICE OF BRITAIN

SEEMAI KURAL

வீட்டிற்கு ஒரு சீமைக் குரல் ! தமிழன் வாழ்வின் உரிமைக் குரல்

இதழ் : 6 • சித்திரை - ஏப்ரல் 2023 • பிரதம ஆசிரியர் பொன் பாலசுந்தரம்






BEAUTY COMPLEX EUROPE LTD
www.beautycomplex.co.uk




சிறை செல்வாரா?

சிறைக்குத் தப்புவாரா?

## உலகக் கண்ணோட்டத்தில் தலைவர்கள்...




Beauty Complex Europe Ltd
29 / 33, Ealing Road, Wembley HA0 4YA
அழகு சாதன பொருட்களின் ஆலயம்

SP Consultancy LTD
உங்களுக்கு எது வேண்டும் நாங்கள் கட்டி தருகின்றோம்.

K.V. Money Exchange LTD
நான்கு (4) கிளைகளுடன் துரித பணமாற்று சேவை





LAKSHMIS JEWELLERS
தரமான தங்கத்திற்கு (EASTHAM) லண்டனில் சிறந்த இடம்

Alli BHAVAN
GET 30% OFF
OVER YOUR FIRST 3 ONLINE ORDERS WITHIN 3 MONTHS



J.M.A JAFFNA
ONLINE SHOPPING
JAFFNA, SRILANKA
TEL - 0757125758




வீட்டிற்கு ஒரு சீமைக் குரல் ... உங்கள்வீடு தேடி வர...

# K.V. Money Exchange LTD

Appt மூலம் பணம் அனுப்பிட.... www.kvmoneytransfer.co.uk




## HEAD OFFICE

**K . V . MONEY EXCHANGE LTD**
NO.143, UNIT - 2, THE BROADWAY
SOUTHALL MIDDLESEX UB1 1LP
Tel - 020 8606 86 93

## BRANCES

**K . V . MONEY EXCHANGE LTD**
UNIT 9 - 10, PLAZA PARADE
29 / 33, EALING ROAD WEMBLEY HA 0 4YT
TEL - 020 8903 59 01

**K . V . MONEY EXCHANGE LTD**
NO - 36, LOMPITHILL
LEWISHAM SE 13 7SW
TEL -020 8692 33 15

**K . V . MONEY EXCHANGE LTD**
( New Brance inside Best Foods )
364 - 366,
BATH ROAD HOUNSLOW TW4 7HT
TEL -020 8577 98 16

20 வருடங்களுக்கு மேலாக மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஸ்தாபனம்....





இலங்கை இந்திய துரித பணமாற்று சேவை..

# சீமைக் குரல்
# SEEMAI KURAL

வீட்டிற்க்கு ஒரு சீமைக்குரல்! தமிழர் வாழ்வில் உரிமைக்குரல்!!



**பிரதம ஆசிரியர்**
டாக்டர் பொன் பாலசுந்தரம்
மூத்த பத்திரிகையாளர்
00 44(0) 7940 207075

**தலைமை நிர்வாகி**
க. அம்பலம் ஜெயதீசன்
ஜெ. இரத்திநேஸ்வரி

**முதன்மை ஆலோசகர்**
தருண்

**செய்தியாளர்கள்**
இராஜநாயகம்
நடராஜா பாரதி
தருண்

**வடிவமைப்பாளர்**
சீமைக் குரல்

**தலைமை விளம்பர நிர்வாகி**
சயந்தினி சிவலிங்கம்
துவாரகா கிருஷ்ணராஜன்

**தலைமை அலுவலகம்:**
**House of Seemai Kural**
Unit 6 , Chandani Bazar,
29 / 33, Ealing Road,
Wembley, Middlesex HA0 4YA,
London (UK)
**தொலைபேசி தொடர்புக்கு:**
Tel-00 44 ( 0 ) 208 900 10 91
00 44 ( 0 ) 77 10 64 63 59
E -admin@seemaikural .com
**வெளியீடு:**
Beauty Complex Europe Ltd.,
House of Seemai Kural
**வங்கி விபரம்**
Bank Name - Natwest Bank
House of Seemai Kural
Account number - 21 11 19 44
sode code - 52 - 10 - 33
SWIFTBIC - NWBKGB2L
Iban - GB 56 NWBK
52 10 33 21 11 19 44



உங்கள் விளம்பரம் இடம் பெற:
00 44 (0) 77 10 64 63 59

படைப்புகளில் இடம்பெறும் பெயர்கள் கற்பனையே.

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு 'சீமைக் குரல்' பொறுப்பாகாது.


## வருமா? வராதா?

அரசியல் அமைப்புச் சட்டத்திலுள்ள 13வது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்கு வருமா? அல்லது வராதா? சிங்கள பௌத்த இனவாதிகள் 13வது சட்ட மூலத்தை பாராளுமன்ற அங்கீகாரத்திற்குக் கொண்டு வராமல் தவிர்ப்பதற்கான முயற்சிகளை ஊாறிய மேற்கொண்டு வருவதே இக்கேள்விக்கு காரணம்.

பௌத்தர்களைத் தாங்கி நிற்கும் அஸ்கிரிய, மல்வத்தைப் பீடாதிபதிகள் "13வது திருத்தச் சட்டம் என ஒன்றில்லை" எனத் தெரிவித்துள்ளனர். இதர பௌத்த பீடங்கள் அதற்கு ஆதரவு வழங்கி வருகின்றன. இனவாத பெரும்பான்மை அரசியல் கட்சிகளும் இதற்கு ஆதரவான கருத்தை விதைக்கின்றன.

அரசியல் சட்டத்தில் இடம் பெற்றிருக்கும் 13வது திருத்தம் சாதாரணமான இருவரினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றல்ல. இரு நாடுகளின் தலைவர்களான இலங்கையின் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா அவர்களுக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்குமிடையில் உத்தியோக பூர்வமாக கைசாத்திடப்பட்ட ஒன்றாகும்.

ஆனால் கைச்சாத்திடப்பட்ட ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் ஆட்சியிலோ அல்லது அவரைத் தொடர்ந்து ஆட்சி பீடம் ஏறிய திருவாளர்கள் பிரேமதாச, ரி.பி. விஜயத்துங்க, ரணில் விக்கிரமசிங்க, திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்கா, மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் அப்பாடியே இருப்பில் வைத்துவிட்டார்கள்!

இப்போது 13வது திருத்தத்திற்கு உயிர் கொடுக்க நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் சீர்குலைவும், பொருளாதார நெருக்கடியும்ஷ வங்குரோத்து நிலையும்ஷ ஸ்திரமான அரசாங்கம் இல்லாமையும் மக்களின் நிம்மதியற்ற நிலையும் தான் காரணமாக இருக்கிறதாக அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

சிங்கள மக்களைத் தமிழ் மக்களுக்கு எதிராகத் திசை திருப்பி நாட்டில் குழப்பமான சூழ்நிலையை ஏற்படுத்தி 13க்கு சமாதி கட்ட நடக்கும் பேரினவாதச் சதியாக இருக்கலாம் என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

பிரதமர் - ஜனாதிபதி - பிரதமராகப் பதவி வகித்த மகிந்த ராஜபக்ச 13வது சட்டத்தை, முன்னர் ஆதரித்தவர். இப்போது மகாநாயக்கர்களிடம் விஷமத்தனமான, சிக்கலான கருத்தை தெரிவித்திருக்கிறார். 13வதிலும் பார்க்க 13 பிளஸ் (மேலதிகம்) கொடுக்கலாம் ஆனால் இப்போது 13 பற்றிப் பேசுவதை நிறுத்த வேண்டும் என்கிறார்.புதிய அரசியல் சட்டத்தின் மூலம் தீர்வைக் காண வேண்டும் என்கிறார். அதற்கு அரசியல் சட்டத்தில் புதிய திருத்தம் கொண்டு வர மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வேண்டும். இன்றைய அரசாங்கமே ஆட்டங் காணும் போது அதுவும் சாத்தியமாகுமா? மகிந்தவிற்கு இது தெரியாத ஒன்றல்ல.

பொன் பாலசுந்தரம்
பிரதம அசிரியர்


**EDITOR IN CHIEF:**
Dr. Pon Balasundaram

**CHIEF ADMIN:**
Mr. K. Ambalam Jeyadeesan
Mrs. J. Rathinesvary

**REPORTERS:**
Rajanayagam
Nadarajah Parathy
Tharun

**GRAPHICS DESIGNERS:**
House of Seemai Kural

**CHIEF ADVERSITING EXECUTIVE**
Sayanthini Sivalingam
Dwaraga Krishnarajan

**HEAD OFFICE:**
**House of Seemai Kural**
Unit 6 , Chandani Bazar,
29 / 33, Ealing Road,
Wembley, Middlesex HA0 4YA,
London (UK)

**CONTACT DETAILS**
Tel-00 44 ( 0 ) 208 900 10 91
00 44 ( 0 ) 77 10 64 63 59
E -admin@seemaikural .com

**PUBLISHER:**
Beauty Complex Europe Ltd.,
House of Seemai Kural

**BANK DETAILS**
Bank Name - Natwest Bank
House of Seemai Kural
Account number - 21 11 19 44
sode code - 52 - 10 - 33
SWIFTBIC - NWBKGB2L
Iban - GB 56 NWBK
52 10 33 21 11 19 44


Banquet : 020 3071 0004
HONEY MOON
BANQUET ★ CATERING ★ BAR ★ RESTAURANT
Restaurant : 020 8570 6200
West London's Finest Venue
Popular for
Weddings & Celebrations
Premium Banqueting
30 - 400 Guests Capacity
Asian Cuisine
Dry Hire Available
PERFECT FOR
WEDDINGS | PRE - WEDDING PARTIES
ENGAGEMENT | ANNIVERSARY
BIRTHDAYS | CELEBRATIONS | MEHNDI
LADIES SANGEET NIGHT | BABY SHOWERS
SAREE CEREMONY | CHRISTMAS PARTIES CORPORATE
EVENTS CONFERENCE & MEETINGS
AWARD NIGHTS | DINNER & DANCE
Hounslow வில் Honeymoon
Restaurant இந்த உணவகம் உங்கள் வீட்டில்
நடக்கும் சகலவிதமான எல்லா வைபவங்களுக்கும்
விசேடமாக outdoor catering
உங்கள் விருப்பத்திற்கேற்ப செய்து தருகிறோம்..
Welcome
HONEY MOON
BANQUET HALL
50 - 52 BELL ROAD, HOUNSLOW TW3 3PB
For Enquiries & Bookings
020 3071 0004 07769 536 312
www.honeymoondining.co.uk
events.honeymoon@gmail.com
Honeymoondining
FROM £ 25 PER PERSON
NEWLY RENOVATED VENUE
FULLY AIR CONDITIONED | FREE PUBLIC CAR PARKING
All Inclusive packages available to suit all budgets

# ‘சோபகிருது” புத்தாண்டில் மங்கலம் மலரட்டும்

**ஸ்ரீலஸ்ரீ பா. வசந்தக் குருக்கள்**
சைவப் புலவர் - சைவ சித்தாந்த பண்டிதர்



எமது சமயம் சார்ந்த அனைத்திற்கும் உள்ளார்ந்த தத்துவம் பொதிந்திருக்கும் மாதங்களுக்கும் அந்தந்த மாதங்களின் பூரணையில் வரும் நட்சத்திரங்களுக்கும் மிகத் தொடர்புண்டு. அனேகமாக நட்சத்திரத்தின் பெயரே அந்த மாதத்திற்கும் இருக்கும். சில வேளை நட்சத்திரமும் பௌர்ணமியும் ஒருநாள் முன்பின்னாக வரலாம். அது சந்திரனின் அசைவைப் பொறுத்தது.

உதாரணமாகத் தை மாதம் பூச நட்சத்திரமும், மாசியில் மகமும், பங்குனியில் உத்தரமும், சித்திரையில் சித்திரையும், வைகாசியில் விசாகமும் - இவ்வாறு பூரணை நாட்களில் அனேகமாக வந்தமையும். அதேபோல் பருவநிலை மாற்றமும் நடைபெறும். இவ்வாறு மாறுகின்ற பருவநிலையில் சித்திரை மாதம் வசந்தகாலம் எனப்படும்.

இதனை இளவேனிற்காலம் என்பார்கள். இக்காலத்தில் மரங்கள் துளிர்த்தல், சோலைகளில் பூக்கள் மலர்தல், பறவை இனங்கள் குதூகலித்தல், குறிப்பாகக் குயிலினங்கள் மகிழ்ந்து கூவுதல் போன்ற பல நிகழ்வுகளையும் காணலாம்.

அதேபோல் பூமியின் அசைவு மேடராசியில் சூரியன் வருகின்றபோது, மேடசங்கிராந்தி என்ற பெயரோடு சித்திரை மாதம் பிறக்கிறது. மேடம் என்றால் ஆடு எனப்பொருள்படும். மேடராசியில் சூரியன் போகிறபோது ஒரு விழாவைச் சங்ககாலத்தில் செய்திருப்பதற்கான சான்றுகள் உள்ளன.

இந்தச் சித்திரை மாதத்தில் பகலும் இரவும் சமமான அளவில் இருப்பதையும் அவதானிக்கலாம். அத்துடன் சித்திரை மாதத்தில் சூரியபகவான் உச்சமடைகிறார். இவற்றை எல்லாம் உற்றுநோக்கி எம் முன்னோர்கள் இதனைச் சமயம் சார்ந்த புத்தாண்டாக கொண்டாடினார்கள்.

காரணம் மேடராசி முதல் பன்னிரண்டு ராசிகளுடனும் தொடர்புடையது சமய வாழ்க்கை. ராசி, நட்சத்திரம், நவக்கிரகம் என்ற சங்கிலியில் பிணைக்கப்பட்ட நிலையில் எமது வழிபாடுகள் இருக்கும்.



அத்துடன் தை மாதம் தமிழ் புத்தாண்டு என்று கூறுவாருமுள்ளனர். இங்கு புத்தாண்டு என்பது அனைவரும் மகிழ்கின்ற விடயம்தான். ஆனாலும் தை மாதம் சூரியன் மகர ராசிக்குப் போகும்.

சூரியன், பூமி அனைவருக்கும் பொது. எனவே அனைவரும் இயற்கைக்குச் செலுத்தும் வழிபாடாக அமையட்டும்.

சித்திரையைப் புத்தாண்டாகக் கொள்வதற்கு 60 வருடப் பெயர்களும் ஒரு காரணமாகும். இவை வடமொழிப் பெயர்களாக அமைந்திருப்பதும் அதன் சுற்றுவட்டத்தில் ஒருவரது 60 ஆண்டுகள் நிறைவடைந்ததும் 60ம் கலியாணம் செய்கின்ற மரபும் இருப்பதைக் காணலாம்.

சித்திரை மாதத்தில் 60 வருடங்களின் புது வருடம் ஒன்று ஆரம்பமாகிறது. அதுவே சமயம் சார்ந்த புத்தாண்டாக ஆன்மீக மக்கள் கொண்டாடுகிறார்கள். அந்நாளில் சூரியன் உச்சம் பெறுதல், பருவநிலை மாற்றம், இதனால் உடலுக்குக் கேடில்லாமல் தலையில் மருத்து (மருந்து) நீர்வைத்துக் குளிக்கும் முறையும் வந்தது. இந்நீரை பதினெட்டு வகையான மூலிகைகள் போட்டுத் தயாரிப்பார்கள்.

இதில் அறுகு, வில்வம், துளசி, தாளம்பூ, தாமரைப் பூ, சுக்கு, மிளகு, திற்பலி, கோரோசனை, குங்குமப்பூ போன்றவை முக்கிய இடம் பெறுகின்றன. அத்துடன் புத்தாடை அணிதல், அதுவும் எந்த நிறத்தில் அணிதல் என்ற ஆர்வத்துடன் அணிதல், ஆலய வழிபாடு, பெரியோர்களிடம் கை விசேஷம் வாங்குதல், ஆசி பெறுதல், கண்ணாடி, தீபம், நிறைகுடம் போன்ற மங்கள தரிசனம் செய்தல் ஆகிய பல சமய சம்பிரதாயத்துடன் இப்புத்தாண்டு நடைபெறுகிறது.

இவ்வருடம் 60 வருட சுற்றுவட்டத்தில் 37வது வருடமாக “சோபகிருது” என்னும் பெயருடன் வருடம் ஆரம்பமாகிறது. வெண்மை நிறம் கூறப்படுகிறது. சோபகிருது என்றால் மங்கலம் நிறைதல் - சுபம் செய்தல் என்பதாகும்.

சித்திரைப் புத்தாண்டில் செய்கின்ற நற்செயலால்
புத்தூக்கம் சேரும் பொலிந்து.

சீமைக் குரல் வாசக நேயர்கள் அனைவர்க்கும்
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

**SP Consultancy LTD**

Government registered company




## Why choose us

Accurately predicting today's global economic environment, our company SP Consultancy is also doing construction works in Britain under the Labor contract method.

- Extensive industry knowledge
- Domestic & commercial
- High standard sourcing

## Our services

- Architectural design
- Planning permission
- Loft conversions
- Extensions
- Refurbishments
- Roofing
- Plumbing
- Electrical work
- CCTV
- 24h Emergency cover
- 10 Year structure warranty

### Contact us

+44 75086 47864
02084010042

info@spconsultancyltd.com

www.spconsultancyltd.com

SP Consultancy LTD

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்




## ஏன் எங்களை தெரிவு செய்யவேண்டும்?

இன்றைய உலக பொருளாதார சூழலை துல்லியமாக கணித்து SP Consultancy ஆகிய எமது நிறுவனம் Labour contract முறையிலும் நிர்மாணவேலைகளை பிரித்தானியாவில் செய்துவருகின்றது. நீங்களும் உங்கள் இல்லத்தை மலிவாக அமைக்க எம்மை அழையுங்கள் 07508647864

- விரிவான தொழில் அறிவு
- வீடு மற்றும் வணிக கட்டிட வேலைகள்
- உயர் தர கட்டிட வேலைகள்

## எங்கள் சேவைகள்

- கட்டிடக்கலை வடிவமைப்பு
- திட்டமிடல் அனுமதி
- மாடி மாற்றங்கள்
- நீட்டிப்புகள்
- புதுப்பிப்புகள்
- கூரை வேலைகள்
- பிளம்பிங் வேலைகள்/சான்றிதழ்கள்
- மின்சார வேலைகள்/சான்றிதழ்கள்
- கண்காணிப்பு கேமரா
- 24h அவசர கவர்
- 10 வருட கட்டமைப்பு உத்தரவாதம்

**Contact us**

+44 75086 47864
02084010042

info@spconsultancyltd.com

www.spconsultancyltd.com

# விளடிமிர் புட்டினுக்கு சர்வதேச நீதிமன்றம் பிடியாணை! ராஜபச்சக்களுக்கு என்ன செய்தி?



**சி. பிறேம்**
ஊடக ஆய்வாளர், பிரித்தானியா

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பேரவலம் இடம் பெற்ற பின்னர் தமிழ் மக்களின் பேசுபொருள் பரப்பில் அடிக்கடி உச்சரிக்கப்படும் ஒரு இடம் ICC என்ற குறியட்டுப் பெயருக்குரிய International Criminal Court. அதாவது அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம்.

நெதர்லாந்தின் ஹேக் நகரிலுள்ள இந்த நீதிமன்ற கூண்டில் இலங்கையில் நடத்தப்பட்ட இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றங்களுக்காக மகிந்த மற்றும் கோட்டாபாய உட்பட்ட ராஜபக்சக்களையும் ஏற்றிவிட வேண்டும் என எத்தனையோ மனுக்கள் அனுப்பப்பட்டன.

2009 மே மாதம் வரை நடத்தப்பட்ட போரில் நாற்பதாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா.வே அறிக்கையிட்டதால் ஒவ்வொரு முறையும் மனித உரிமை பேரவை அமர்வுகளை மையப்படுத்தி ஐரோப்பாவில் நீதிகோரும் மிதிவண்டிப் பயணங்களும் ஐ.சி.சி. வாசலை தாண்டாமல் அல்லது அங்கு ஒரு மனுவை கையளிக்காமல் சென்றதும் இல்லை. அந்தளவுக்கு இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் தமிழர்கள் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் நீதியை எதிர்பார்த்துக் காத்துள்ளனர்.

இவ்வாறு பார்த்த கண் பூத்திருக்கும் வகையில் தமிழர்கள் ஹேக் வாசலில் 13 வருடங்களையும் தாண்டிக் கண் வைத்திருக்க திடுதிப்பென ரஷ்ய அரச தலைவர் புட்டினையும் ரஷ்யாவின் சிறார் உரிமை ஆணையாளர் மரியா லவோவா - பெலோவாவையும் கைது செய்யுமாறு அதே அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் ஒரு அழைப்பாணையைப் பிறப்பித்திருக்கிறது. அதாவது தொழில்நுட்பரீதியாக விளாடிமிர்



புட்டினும் ரஷ்யாவின் சிறார் உரிமை ஆணையாளர் இப்போது தேடப்படும் நபர்களாகியுள்ளனர். ஆனால் புட்டினோ இந்த கைது ஆணை எல்லாம் வந்த பின்னர் உக்ரெயினில் ஆக்கிரமிக்கப்பட்ட மரியபோலுக்கு ஒரு திடீர் பயணத்தை மேற்கொண்டார். அதன் பின்னர் மொஸ்கோவுக்கு வந்த சீன அரச தலைவருடனும் கைகுலுக்கி பேச்சுக்கள் நடத்தியமை வேறு விடயம்.

ஒரு வருடம் தாண்டிய உக்ரெனியப் போரில் உக்ரெனிய சிறார்களை ரஷ்யாவிற்கு சட்டவிரோதமாக நாடு கடத்திய நகர்வை மையப்படுத்தியே குற்றவியல் நீதிமன்றம் இந்த அழைப்பாணையை பிறப்பித்துள்ளது.

ஈழத் தமிழர்களுக்கு அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் இதுவரை நீதி வழங்காமல் விட்டாலும் இது உலகின் இறுதி முயற்சி; நீதிமன்றம் என்ற வர்ணிப்புக்கு உரியது. இந்த நீதிமன்றத்தை உருவாவதற்காக 123 நாடுகள் ஒப்பமிட்டிருந்தாலும் இப்போதைய நிலையில் ரஷ்யா, அமெரிக்கா, உக்ரைன் சீனா உட்பட்ட நாடுகள் அதன் அங்கத்துவ நாடுகளில் இல்லை.

தமிழக மக்களின் இனப்படுகொலை மீதான கோப்புகளில் கண் காது வாய் பொத்தியுள்ள குரங்கு பொம்மைகள் போன்ற நிலையில் உள்ள ஐசிசி உக்ரெனிய சிறார்கள் நாடு கடத்தப்பட்ட விடயத்தில் துள்ளியெழுந்து புட்டினை மடக்கத் தலைப்படுகிறது.

விளாடிமிர் புட்டினுக்கு பிறப்பிக்கப்பட்ட கைது அழைப்பாணை குறியீட்டு ரீதியில் மட்டும் வரலாற்று முக்கியமானது. ஏனெனில் கைது ஆணையை எதிர்நோக்கியுள்ளவர் ஒரு துக்கடா மனிதர் அல்ல. மாறாக ஐ.நா. பாதுகாப்பு பேரவையில் நிரந்தர உறுப்பு நாடு ஒன்றின் அரச தலைவர். அத்துடன் உலகை 5 முறை அழிக்கத் தேவையான

நாசகார அணுவாயுதங்களை கொண்ட நாட்டின் தலைவரும் கூட.

இவ்வாறாக இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே என்ற அடிப்படையில் தானோ என்னவோ கைது அழைப்பாணை வந்ததும் ரஷ்யா அதனை எள்ளல் செய்துள்ளது. குறிப்பாக ரஷ்யாவின் முன்னாள் அரச தலைவரான டிமிட்ரி மெட்வெடேவ், இந்த கைது ஆணையை கழிவறைக்கு பயன்படுத்தப்படும் காகிதச் சுருளுடன் அதாவது ரொய்லற் பேப்பருடன் ஒப்பிட்டு இதனை எங்கு பயன்படுத்த வேண்டும் என்பதை விளக்க வேண்டிய அவசியமில்லையெனவும் எள்ளல் செய்திருந்தார்.

தொழினுட்ப ரீதியாக அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் கைது ஆணைகளை பிறப்பித்ததாலும் அதற்குச் சந்தேக நபர்களை கைது செய்யும் அதிகாரம் அதற்கு இல்லை, மாறாக குற்றவியல் நீதிமன்றத்தின் உறுப்பு நாடுகள் மட்டுமே அதனை செய்யமுடியும். இதற்குள் இப்போது ரஷ்யா அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் ஒரு உறுப்பு நாடும் அல்ல. கடந்த 2016ல் புட்டினின் உத்தரவின்படி ஐசிசி ஒப்பந்தத்தில் இருந்து ரஷ்யா விலகியிருந்தது. ஏன் அமெரிக்கா கூட ஐசிசியின் உறுப்பு நாடு அல்ல.

ஐசிசியைப் பொறுத்தவரை குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் தோன்றாத நிலையில் அது விசாரணைகளை நடத்துவதில்லை என்றாலும் ஐசிசி நீதிபதிகளின் முடிவுகளின் அடிப்படையில் இவ்வாறான விசாரணை அனுமதிக்கக்கூடும். தொழினுட்பரபயைாக நோக்கினால் குற்றம் சாட்டப்பட்ட புட்டினும் ரஷ்யாவின் சிறார் உரிமை ஆணையாளரும் இந்த அழைப்பாணையின் அடிப்படையில் ரஷ்ய அதிகாரிகளால் ஒப்படைக்கப்பட்ட வேண்டும் அல்லது ரஷ்யாவிற்கு வெளியே கைது செய்யப்பட்டு முன்னிலைப்படுத்தப்படவேண்டும் . இல்லையென்றால் புட்டின் அதிகாரத்தில் இருந்து தூக்கியெறியப்பட்டு நீதிக்காக ஒப்படைக்கப்பட வேண்டும். அதுவும் இல்லையென்றால் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் ஏதாவது ஒரு உறுப்பு நாடு இதனை செய்து கொள்ள வேண்டும்.



ஆனால் இவ்வாறான விடயங்களின் நடைமுறைச்சாத்தியங்கள் குறித்து அதிகம் சொல்லிக் கொள்ள வேண்டியதில்லை. இதனால் ஹேக் நீதிமன்றத்தின் கூண்டில் விளாடிமிர் புட்டின் தோன்றுவதற்கான வாய்ப்பை இப்போதைக்கு கற்பனையில் மட்டுமே கண்டு கொள்ள முடியும் என்றாலும் எப்போதைக்கும் இது கற்பனையாகவும் இருக்க முடியாது.

ஏனென்றால் முன்னர் இவ்வாறு தான் ஹிட்லருக்கு பின்னர் நின்ற நாஜி போர்க் குற்றவாளிகளும் தாம் அசைக்கப்படமுடியாத பாதுகாப்புடன் இருப்பதாக நினைத்துக்கொண்டனர். அதேபோல பொஸ்னியப் போரை மறைமுகமாக நடத்திய முன்னாள் யூகோஸ்லாவிய அரச தலைவர் ஸ்லோபோடன் மிலோசெவிக்கும் சரி முன்னாள் லைபீரிய தலைவர் சார்லஸ் டெய்லரரும் சரி அதிகாரத்தில் இருந்தபோது, தாம் அனைத்துலக கூண்டில் ஏறுவதை கற்பனை கூட செய்ய முடியாத வகையில் சக்திவாய்ந்த முகங்களாக இருந்தனர். ஆனால் வரலாற்றின் சுழற்சியில் அவர்கள் ஒருநாள் இவ்வாறான வரலாற்று விசாரணைகளை எதிர்கொண்டிருந்தனர்.

அவ்வாறாயின் என்றோ ஒரு நாள் விளடிமிர் புட்டின் அல்லது சிறிலங்கா ராஜபக்சக்கள் ஐசிசி கூண்டில் ஏற்றப்படுவார்களா? இதன் சாத்தியப்பாடுகள்தான் என்ன? வரலாற்று பட்டறிவில் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை செய்தவர்கள் முழுமையாகத் தப்பிக் கொள்ள முடியாது என்பது நியதி.

இந்த நியதியின் அடிப்படையில் உக்ரேனியச் சிறார்களை ரஷ்யாவிற்கு சட்டவிரோதமாக நாடு கடத்திய குற்றத்துக்காக விளடிமிர் புட்டின் கைது செய்யப்பட்டு கூண்டில் ஏற்றப்படுவதற்கு முன்னர் இலங்கையில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை படுகொலை செய்த குற்றவாளிகளும் கூண்டில் ஏற்றப்பட்டாகவேண்டும். இவ்வாறெல்லாம் இடம் பெறாமல் ஐசிசியின் ஓரவஞ்சனை அதிகாரத்துவம் நீட்சியடைந்தால் அனைத்துலக நீதியும் பிழைத்துக் கொண்டே இருக்கும்.


Alli BHAVAN
IT'S ALL ABOUT FOOD
Bexleyheath
மாநகரத்தில் ஓர் பிரமாண்டமான உதயம்
Alli Bhavan Supermarket
அனைத்து இலங்கை, இந்திய,
ஆசிய, ஆபிரிக்க
உணவுப் பொருட்கள் பூஜைப் பொருட்கள்,
பூ மாலைகள், பசுமையான
மரக்கறி வகைகள்
பழவகைகள் மலிவாக பெறுவதுடன்....
Alli BHAVAN
GET 30% OFF
OVER YOUR FIRST 3 ONLINE
ORDERS WITHIN 3 MONTHS
CREATE AN ACCOUNT NOW &
RECEIVE 10% OFF EACH ORDER OVER THE FIRST 3
ONLINE ORDERS WITHIN 3 MONTHS
நாவை சுண்டி இழுக்கும் வகையில்
இடியப்பம், வடை, Roll, Srilankan Cakes
வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்...
Fresh மீன் வகைகள், இறைச்சி வகைகளையும்
உங்கள் விருப்பத்துகேற்ற வகையில் சுத்தமாக வெட்டி
பெற்றிட இன்றே விஜயம் செய்யுங்கள்...
020 3149 1393
WWW.ALLIBHAVAN.COM
Broadway Square Car Park இல் இருந்து
ஒரு நிமிடத்துக்கு குறைவான நடை தூரம் மாத்திரமே...
Nando's
Barclays
Sainsburys
Broadway Shopping Centre
£20 க்கு மேல்
கொள்வனவு
செய்தால், 1 மணிநேர
Broadway
Square Car Parking
கட்டணம் இலவசம்
Your new local supermarket located at
11 - 15 MARKET PLACE, BEXLEYHEATH DA6 7DZ
OPEN FROM 8 AM TO 10 PM EVERYDAY
CAR PARK AT 3 HIGHLAND ROAD, LONDON DA6 7LY
Uber Eats
deliveroo
JUST EAT

# நூலிழையில் ஜோன்ஸனின் எதிர்காலம்!



பிரித்தானிய முன்னாள் பிரதமர் பொறிஸ் ஜோன்ஸனின் அரசியல் எதிர்காலம் நூலிழையில் தங்கியிருப்பதாக உள்நாட்டுப் பத்திரிகைகள் கூறுகின்றன.

கோவிட் நோய் பரவிய காலத்தில் இவர் பிரதமராக இருந்தவர். அப்போது பொதுமக்களுக்கு பலவாறான கட்டுப்பாடுகள் அரசாங்கத்தால் விதிக்கப்பட்டிருந்தது. அந்தக் காலகட்டத்தில் ஜோன்ஸன் தமது 'பிரதமர் இல்லத்தில்" (இல. 10) மாலை நேர விருந்துபசாரங்களை நடத்தியிருந்தார்.

இவரது விருந்துபசாரங்கள் பற்றி பாராளுமன்றத்தில் கேள்வி கேட்டபோது தவறான பதில் கொடுத்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இது பற்றி ஆராய 7 அங்கத்தவர்கள் கொண்ட சபைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு விசாரணையை நடத்தியுள்ளது.

விசாரணை முடிவில் பத்திரிகைகள் பலவாறான வியூகங்களை வெளியிட்டுள்ளன. அவற்றில் சில-

விசாரணைக் குழுவின் முடிவு ஜோன்ஸனின் எதிர்காலத்தையும், நிரந்தரமான கௌரவத்தையும் தீர்மானிப்பதாக இருக்கும்; பாராளுமன்றத்திற்குதான் பொய் சொல்லவில்லை என்பதை "பைபிள்" மீது சத்தியம் செய்து கூறினார். குழு அங்கத்தவர்களுடன் காரசாரமாக வாக்கு வாதப்பட்டார். பொறுமையை இழந்துவிட்டார். முன்னுக்குப் பின முரணான தகவல்களை வெளியிட்டார்.

குற்றச் சாட்டு நிரூபிக்கப்பட்டால் தண்டனை 1. 13 சபைக் கூட்டங்களுக்குத் தடை 2. அதனால் எம்.பி. பதவியை இழத்தல், 3. பின்னர் சொந்தத் தொகுதியில் போட்டியிடவும் வாய்ப்பு.

ஜோன்ஸனின் விசாரணை அறிக்கை இரு மாதங்களில் வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பதவியை இழந்த ராகுல் காந்தி

இந்தியப் பிரதமர் மோடியைப் பற்றியும் அவரது சகோதரர்கள் பற்றியும் ராகுல் காந்தி 2019ல் நடைபெற்ற தேர்தலில்போது பேசியவை சம்பந்தமான வழக்கில் அவர் பாராளுமன்ற அங்கத்தவர் பதவியை இழந்துள்ளார்.

இப்படி ராகுல் காந்தியின் பதவி பறிக்கப்பட்டதற்கு காங்கிரஸ் வட்டாரங்கள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன.

"கிரண் மோடி, லலித் மோடி, நரேந்திர மோடி" என்ற தந்தையின் பெயரை தமது பெயருக்கு முன்னால் இணைத்துக் கொண்டிருக்கும் எல்லோருமே "கள்ளர்கள்" இப்படி இவர்களுக்கு எப்படி "மோடி" பெயர் வந்தது? எனத் தேர்தல் கூட்டத்தில் கேட்டிருந்தார். இதைவிட மற்றொரு அவதூறான வார்த்தையையும் ராகுல் உபயோகித்ததாக வழக்கில் பதிவாகியிருந்தது.

தான் முறைகேடாகப் பேசவில்லை என ராகுல் காந்தி மறுத்திருந்தார். ஆனால் அதை ஏற்றுக் கொள்ளாத நீதிமன்றம் அவருக்கு இரண்டு வருட சிறைத் தண்டனை விதித்துள்ளது. பாராளுமன்ற அங்கத்தவர் பதவியை இழக்க இதுவே காரணமானது.

தமக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய இருப்பதாக ராகுல் காந்தி அறிவித்துள்ளார்.





FOODCiTY
SRILANKAN & INDIAN GROCERY
உங்கள் அனைத்து மளிகை பொருட்களையும்
Elaka Food City இல் மலிவாக பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்!
அத்துடன் நீங்கள் கொள்வனவு செய்யும் பொருட்கள் அனைத்தையும் உங்கள் வீட்டுக்கு கொண்டு வந்து தரப்படும்.
FOODCiTY
இலங்கை, இந்திய பசுமையான காய்கறிகள் English, Srilankan, Indian மற்றும் ஆபிரிக்க மளிகைப் பொருட்கள் அனைத்தையும் மாதந்த புத்தம் புதிய விசேட விலைக் கழிவுகளுடன் அள்ளி செல்ல இன்றே நாடுங்கள்..
உங்கள் விசேட தேவைகளுக்கு பூக்கள் மற்றும் பூ மாலைகளையும் நியாய விலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.
42, LONDON ROAD, TOOTING, UK, SW17 9HP
Ph : +44 20 7018 7150
www.elakafoodcity.com | Slfoods.limited@gmail.com

# இழப்பும் – அழிவும் ஏற்படும் ட்ரம்ப் ஆவேசம்

தன்மீது மோசமான குற்றம் சுமத்தப்பட்டால் அதனால் இழப்பும், அழிவும்தான் ஏற்படும் என்று அரசாங்கத்திற்கு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தம்மைக் கைது செய்வதற்கு நீதிமன்ற ஏற்பாடு நடைபெற்று வருவதாக தெரிவித்த ட்ரம்ப் நமது



ஆதரவாளர்களை வீதிப் போராட்டங்களுக்கு தயாராகுமாறும் கேட்டுள்ளார். இதனால் அரசாங்கத்துடனான முறுகல் நிலை சூடு பிடித்துள்ளது.

சென்ற தேர்தலின்போது ஆபாசத் திரையுலக அழகி ஸ்ரோமிடானியல் என்பவருடன் உடலுறவு கொண்டிருந்தார் எனவும், அதற்காக ஒரு லட்சத்து 30 ஆயிரம் டொலரை தமது வழக்கறிஞர் மூலம் அழகிக்கு கொடுத்தார் என்றும் ட்ரம்ப் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்தப் பணம் தேர்தல் நிதிக்காக ஒதுக்கப்பட்ட பணம் என பின்னர் தெரிய வந்துள்ளது. அமெரிக்க தேர்தல் விதிமுறைகளுக்கு இது பாரதூரமான கிரிமினல் குற்றமாகும். அந்தப் பணத்தையும் தமது வழக்கறிஞர் மூலமாகவே கொடுத்துள்ளார்.

இக்குற்றச்சாட்டுக்களை எல்லாம் மறுத்துள்ள ட்ரம்ப் அரசியல் பழிவாங்கலுக்காகவே இவைகள் கொண்டுவரப்பட்டு இருப்பதாக கூறியுள்ளார்.

இக்குற்றச்சாட்டைத் தவிர இன்னும் பல வழக்குகளுக்கு இவர் முகம் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். முக்கியமாக வர்த்தக



ரீதியிலானவையும், அரசாங்க வெள்ளை மாளிகையில் இருக்கவேண்டிய முகியமான அரசாங்க ஆவணங்கள் இவரது சொந்த இல்லத்தில் கண்டுபிடிக்கப்பட்டதும் இவைகளில் சில.

வரும் அமெரிக்க தேர்தலில் தாம் போட்டியிடுவதைத் தவிர்ப்பதற்காகவே இக்குற்றச்சாட்டுக்கள் தம்மீது சுமத்தப்படுவதாக ட்ரம்ப் தொடர்ந்து கூறிவருகிறார்.





eazyproperty
LOOKING FOR
DREAM Home?
FOR SALE
SALES
LETTINGS
BLOCK MANAGEMENT
NEW HOMES
PROPERTY MANAGEMENT
தமிழில் உரையாடி உங்கள்
அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்து தரப்படும்
020 8550 8788
info@eazyproperty.co
www.eazyproperty.co

# பெண்களும் கண்களும்

**ஓவியன்**



பெண்களுடைய அழகில் மயங்காத தமிழ் இலக்கியங்கள் எதுவும் இல்லை என்றே கூறலாம். எழுத்தாளர்களுக்கு இன்றும் விருந்தாக பெண்களின் அழகு இருந்து வருகிறது.

சிலர் கண்ணழகைப் பார்த்து "மான் விழியாள்" என மருண்டும் வெருண்டும் போய் ரசிக்கிறார்கள்.

சிலர் உதடுகளைக் கொவ்வைப் பழங்களாக வாயூறிவாயூறியபடி ரசிக்கிறார்கள்.

மற்றும் சிலர் மூக்கின் அழகை நாத ஒலிபரப்பும் சங்கிற்கு ஒப்பிடுகிறார்கள்.

இன்னும் சிலர் மார்பகங்களை வீடுகளில் அழகாகக் காட்சிதரும் செவ்விழநீர் குலைகளுக்கு நிகராகப் பார்த்து ரசிக்கிறார்கள்.

இன்னும் சிலர் பெண்களின் நடை அழகில் மயங்கிப் போய் அன்னப் பட்சிகள் இன்றில்லாமல் போனதற்கு பெண்கள் தான் காரணம் என்று புலம்புகிறார்கள்.

பெண்களின் கண்களைப் பற்றி ஒரு விளக்கத்தைப் படித்துப் பாருங்கள்.



விசாலமான அழகான கண்கள் உள்ள பெண்கள் பாசம் மிக்கவர்களாகவும், மன நிறைவாளர்களாகவும், கடமை உணர்வில் கவனம் உடையவர்களாகவும் இருப்பார்களாம்.

சிறிய கண்களை உடையவர்கள் ரோசக்காரர்களாக இருப்பார்களாம். எதிலும் கூர்மை இருக்கும் என்கிறார்கள்.

சோம்பல் நிறைந்த கண்களை உடைய பெண்கள் சுறுசுறுப்பற்றவர்களாகவும், விரைவில் சோர்வடையக் கூடியதாகவும் காணப்படுவார்கள். பலவீனமான இதயம் இவர்களுக்கு இருப்பதையும் காணலாம்.




## கேப்டன் மில்லர்

கோலிவுட், பாலிவுட், ஹாலிவுட் என அனைத்திலும் கலக்கி வருபவர் தான் நடிகர் தனுஷ். இவர் நடிப்பில் அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் கேப்டன் மில்லர் திரைப்படம் உருவாகி வருகிறது.

இப்படம் 1930 –40 களில் நடந்த வரலாற்று சம்பவத்தை மையமாக வைத்து உருவாகும் இப்படம் தமிழ், தெலுங்கு, ஹிந்தி போன்ற மொழிகளும் வெளியாகவுள்ளது.

தற்போது கேப்டன் மில்லர் படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு தென்காசியில் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இப்படம் இந்த ஆண்டு தீபாவளிக்கு வெளியாகும் என்று கூறப்படுகிறது. ஆனால் சம்பந்தப்பட்ட இடத்தில் இருந்து இது பற்றி அதிர்க்கரபூர்வமான அறிவிப்பு வெளியிடவில்லை.

இந்நிலையில் கேப்டன் மில்லர் படத்திற்காக தனுஷ் ரூபாய். 20 கோடி சம்பளம் வாங்கியுள்ளாராம். இதையடுத்து இவர் நடிக்கவிருக்கும் படத்தில் சம்பளத்தை அதிகரிக்க போவதாக சினிமா வட்டாரங்களில் கூறப்படுகிறது.

# பரகசியமான அரண்மனை இரகசியங்கள்



டாக்டர் பொன் பாலசுந்தரம்

பிரித்தானிய அரச குடும்பத்திற்குள் இருந்துவந்த உள் பூசல்கள் இப்போது உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் அளவிற்கு வளர்ந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

எழுபது வருடங்கள் ஆட்சியிலிருந்த மகாராணி எலிஸபெத் அவர்களின் மறைவால் ஏற்பட்ட துயர் மக்களுடைய மனங்களில் இருந்து மறைவதற்கு முன்னர் அரண்மனை உட்பூசல்கள் உலக நாடுகளில் வலம் வருவதை பிரிததானிய பிரஜைகள் எவரும் விரும்பமாட்டார்கள் என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது.



அரண்மனைக்குள் இடையிடையே பாரதூரமான சம்பவங்கள் நடப்பதுண்டு. ஆனால் எலிசபெத் மகாராணியாரின் சமயோசித புத்தி, நிர்வாகத் திறன், அமைதியான அணுகுமுறை போன்றவைகள் மூலம் இச்சம்பவங்களைச் சமாளிக்கும் சாமர்த்தியம் இருந்தது.

மகாராணியாரின் ஆட்சிக் காலத்தில் சார்ள்ஸ் இளவரசரின் மனைவி இளவரசி டயானா உல்லாசமாக மற்றொரு நபருடன் பிரான்ஸ் நாட்டில் காரில் பயணம் செய்தபோது விபத்துக்குள்ளாகி இறந்ததும்

இளவரசர் அன்ட்று (இப்போதைய அரசரின் சகோதரர்) தரகர் ஒருவர் ஏற்பாட்டில் அணைத்துக் கொடுக்கப்பட்ட 17 வயது இளம் பெண்ணுடன் உடலுறவு கொண்டதான சர்ச்சையும் இப்படியான சம்பவங்களை எல்லாம் சமாளித்த திறமை படைத்தவர்.

இவை ஒருபுறமிருக்க இன்று ஏற்பட்டிருக்கும் அரண்மனைக் கொந்தளிப்பிற்கு வருவோம்.

இப்போதைய மன்னர் அவர்களுக்கு இரண்டு மகன்கள். ஒருவர் இளவரசர் வில்லியம் மற்றவர் இளைய சகோதரர் ஹரி.

இளவரசர் வில்லியம் குடும்ப பாரம்பரியமுள்ள கத்தரீன் என்ற பெண்ணைத் திருமணம் செய்தவர். காதல் திருமணம். பல்கலைக் கழகத்தில் படிக்கும்போது ஏற்பட்ட காதல், இன்று இவர்கள் வாழ்க்கையில் இரண்டு ஆண்கள், ஒரு பெண் ஆக மலர்ந்துள்ளனர்.

அரசர் சார்ள்ஸ் அவர்களிடமுள்ள செங்கோலிற்கு வில்லியம் வாரிசானவர்.

இளவரசர் ஹரி அரச பாரம்பரியம், குடும்ப பாரம்பரியத்தில் இருந்து விலகிப் பிரபலமான அமெரிக்க நடிகை மேகன் என்பவரைத் திருமணம் செய்தவர். மேகன் அவர்களுக்கு இது இரண்டாவது திருமணமாகும்.

இது ஒருபுறமிருக்க மேகன் கறுப்பு இனத்தைச் சேர்ந்தவர். அப்பட்டமாகச் சொல்வதானால் ஆப்பிரிக்க இனத்தவர். ஆனால் அமெரிக்கப் பிரஜை.

காலனி ஆதிக்க காலத்தில் ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து கறுப்பு இனத்தவர்களை அடிமைகளாகப் பிரித்தானியாவிற்கு கப்பல்களில் ''இறக்குமதி'' செய்து வேலை வாங்கிய கறை இன்றும் அடிக்கடி புகை கக்கிக் கொண்டிருக்கிறது.

அரண்மனைக்குள் சமீபத்தில் இடம் பெற்ற இனவாத சம்பவத்தை இங்கு குறிப்பிடலாம். இச்சம்பவம் அரண்மனையை ஆட்டிப் படைத்துவிட்டது.

கண்டனக் கணைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் அரண்மனை தத்தளித்துக் கொண்டிருந்த சமயத்தில் இளவரசர் சார்ள்ஸ் தலையிட்டு அதற்குக் காரணமாக இருந்த பொறுப்பு வாய்ந்த -

அதுவும் மகாராணிக்கு நெருக்கமாக 60 ஆண்டுகள் சேவையிலிருந்த சீமாட்டி கஸன் ஹஸே என்பவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டார்கள்.

நடந்தது இதுதான்!

மகாராணியாரின் தலைமை அதிகாரியான சுஸன் ஹஸேப் என்பவர் காருண்ய உதவி நன்கொடை ஸ்தாபன தலைவி நாகோஸி புலானி என்பவர் அரண்மனைக்குச் சென்றிருந்த சமயத்தில் அவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது ‘‘நீங்கள் எங்கிருந்து வந்திருக்கிறீர்கள்?’’ எனக் கேட்டிருக்கிறார்.

அதற்கு “நான் இலண்டனிலுள்ள ஹக்னியில் இருந்து” என்று புலானி பதிலளித்தள்ளார்.

ஆனால் இந்தப் பதிலைக் காதில் எடுத்துக் கொள்ளாத ஹஸேய் மறுபடியும் பல முறை ‘‘எந்த நாட்டிலிருந்து வந்திருக்கிறீர்கள்’’ எனக் கேட்டிருக்கிறார். தம்மை இனம்காண இந்தக் கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்பதை உணர்ந்த புலானி அங்கிருந்து வெளியேறிவிட்டார்.

இனவாதத்திலிருந்து அரண்மனை இன்னும் விடுபடவில்லை என்பதற்கு இது ஒரு உதாரணம் என பலவாறான கூச்சல் எகுந்தபோது சார்ள்ஸ், வில்லியம் உட்பட பலரும் தலையிட்டு அப்படிக் கேள்வி எழுப்பியவரைப் பதவி நீக்கம் செய்துவிட்டனர்.

இந்தச் சம்பவமும் ஹரியின் ‘‘தனிவழிப் பயணத்திற்கு’’ பாதையாக இருக்கிறது.

அமெரிக்க வாழ்க்கையை ஹரி அணைத்துக் கொண்டிருக்கிறார். இங்கு அரசவாசஸ்தலம் கொடுக்கப்பட்டிருந்தாலும் இங்கும் அங்குமாகத் திரிகிறார்.

இளம் வயதிலிருந்து விமானப் படையில் சேர்ந்து வானூர்திப் பிரிவில் பைலட்டாகப் பதவி உயர்வு பெற்றவர். ஆப்கானிஸ்தான் யுத்தத்தில் போர்முனையில் தீவிரமாகப் பங்காற்றியவர்.

ஹரியின் இளமைக் கால அரண்மனை வாழ்க்கையின் ஆரம்ப காலம் இது.

அரச குடும்பத்திலிருந்து பிரிந்ததும் படிப்படியாக இராணுவ உடையில் மாற்றம், அந்தஸ்தில் மாற்றம், பாதுகாப்புக் குறைப்பு, அரண்மனை விழாக்களில் முன் ஆசனமும் கிடைக்காது. இப்படிப் பலதும் அரண்மனையால் மீளப் பெறப்பட்டன.

மிகக் கடுமையானதும், வரையறுக்கப்பட்ட சட்டதிட்டங்களையும் கொண்டுள்ள நாடு பிரித்தானியா, அரசனுக்கும் ஆண்டிக்கும் ஒரே சட்டம்தான். நீதிமன்றத்திலும் இதே நிலைப்பாடுதான். அதற்கமையச் சட்டங்கள் ஹரியையும் விட்டுவைக்காது,

இப்படியான காலகட்டத்தின் தாக்கம் ஹரியை நிலைதடுமாற வைத்திருப்பதாக சிலர் கருதுகிறார்கள். அரண்மனை வாழ்க்கையையும், அரச சுகபோகங்களையும் துறந்தை நிலை, வாழ்க்கை வேண்டாம் என்னும் முடிவை எடுக்கும் மனமாற்றத்தின் பாதையாகி இருக்கலாம்.

‘‘அரச குடும்பம் தனது பாரம்பரியங்களை மற்றவர்கள் மீது திணிக்காமல்” கட்டுப்பாடாகவும், மாற்றங்களை அனுசரித்தும் நடக்கவேண்டும்” என மனம் திறந்து கூறியிருப்பதையிட்டு பிரித்தானிய மக்கள் கவலைப்படுவதையும் காணலாம்.

இப்படியான எண்ணங்களின் மத்தியில்தான் தனது சுயசரிதையை எழுதி வெளியிட்டுள்ளார். ஸ்பானிய மொழியில் முதலில் வெளியிடப்பட்ட இந்நூலின் பெயர் ஹரி என்பதாகும். (தேவைப்படும்போது - என தமிழில் கொள்ளலாம்) இதை இரட்டைக் கருத்தாளத்தில் ஹரி கூறியிருக்கிறார்.

தனது சகோதரர் வில்லியத்தையும் தன்னையும் தந்தையாரான இளவரசர் சார்ள்ஸ் தமது தாயாரான டயானாவிற்கு “முதலாது மகனை வாரிசாகவும் அதாவது எதிர்காலத்தில் மன்னராகவும், இரண்டாவது மகனை ஒரு “ஸ்பெயர்” ஆகவும் பெற்றுத் தந்திருக்கிறீர்கள்’’ என அறிமுகப்படுத்திப் பெருமைப்பட்டதாகவும் சுயசரிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

விரும்பினால் மட்டும் தேவைக்கேற்ப தன்னைப் பயன்படுத்தலாம் என இளவரசர் ஹரி நினைத்திருக்கலாம் எனக் கருதியிருக்கலாம்!

இப்படி பல விடயங்களை ஒளிவுமறைவின்றி வெளி உலகிற்கு எடுத்துக் கூறியிருக்கிறார் ஹரி.

தமது தந்தையாரான இளவரசர் சார்ள்ஸ் கமிலாவை விவாகம் செய்ய இருப்பது தெரியவந்ததும் தானும் சகோதரர் வில்லியமும் கொதித்தெழுந்ததாகவும் தந்தையாரிடம் சென்று அந்தப் பெண்ணை திருமணம் செய்யாதீர்கள். விட்டுவிடுங்கள் எனக் கேட்டதாகவும் மற்றொரு பகுதியில் தெரிவித்துள்ளார்.

அடுத்த இதழில் வில்லியம் ஹரியை அடித்து வீழ்த்தியதையும், ஹரி கர்ப்பிழந்த கதையையும் படிக்கத் தவறாதீர்கள்.



உங்கள் இல்லத்தில் நிகளும்
அனைத்து மங்கள
நகழ்வுகளிற்கும் பாரம்பரிய
முறைப்படி தங்கநகை
ஆபரணங்கள் செய்து தரப்படும்
AMAARA
JEWELLERY
தங்க நகை சேமிப்பு திட்டத்திலும் இணைந்து கொள்ளலாம்...
பழைய நகைகள் நல்ல விலைக்கு வாங்கப்படும்!
பழைய நகைகளைக் கொடுத்து
உங்கள் விருப்பத்திற்கேற்ப
புதிய நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்
020 7460 61 00 | 00 44 74 48 99 44 51
Amaaralondon info@amaarajewellery.co.uk
Amaara Jewellery 15, Ealing Road Wembley HA0 4AA

# இலண்டனுக்குள் படகில் வந்த இந்திய அகதிகள்

# றுவண்டாவுக்கா? இந்தியாவுக்கா?

இலண்டனுக்குள் அனுமதி எதுவுமின்றி கடல் வழியாக வந்த இந்திய அகதிகள் றுவன்டாவுக்கா அல்லது இந்தியாவுக்கா அனுப்பி வைக்கப்படுவார்கள் என்ற கேள்வி எழுந்துள்ளது.

விஸா போன்ற அனுமதிப் பத்திரங்கள் எதுவுமின்றி சிறிய படகுகள் மூலம் அகதிகளாக இந்தியர்கள் அதிகளவில் வருவதாக அரசாங்க புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

ஆப்கானிஸ்தான், சிரியா ஆகிய நாடுகளிலிருந்து அதிகமான அகதிகள் வருவதாகவும் சமீப காலத்தில் இந்தியாவிலிருந்து வருபவர்களது தொகை மூன்றாவதாக இருப்பதாவும் அரசாங்க தகவல்கள் கூறகின்றன.

ஜனவரி மாதத்தில் மட்டும் 250 அகதிகள் இந்தியாவிலிருந்து வந்துள்ளனர். இவர்கள் பெரிய கப்பல்களில் சமுத்திரத்தைக் கடந்து பின்னர் சிறிய படகுகளில் வந்து கரை சேர்ந்து இலண்டனுக்குள் வந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

பயங்கரமான சமுத்திரங்களையும் தாண்டி இப்படி 1180 பேர் சென்ற சில மாதங்களுக்குள் நாட்டுக்குள் அகதிகளாக வந்திருக்கிறார்கள்.

### சொந்த நாட்டுக்கு அனுப்ப யோசனை

அகதிகளாகப் பல நாடுகளிலுமிருந்தும் வருபவர்களைக் கட்டுப்படுத்தும் தீவிரமான நடவடிக்கைகளைக் கொண்டு வர இருப்பதாக பிரதமர் ரிஷி சுனக் அறிவித்துள்ளார். இது சம்பந்தமாக அமைச்சரவை ஆராடீநுந்து வருவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அகதிகள் சம்பந்தமான முக்கியமான இரண்டு ஏற்பாடுகள் பற்றி ஆராயப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

1. எந்த நாட்டிலிருந்து வருகிறார்களோ அந்த நாட்டிற்கே அவர்களை அனுப்பி வைப்பது.

2. அல்லது அகதிகளை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் றுவன்டா என்னும் ஆப்பிரிக்க நாட்டுக்கு அனுப்பி வைப்பது.

ஆனால் றுவன்டா நாட்டில் போதிய வசதிகள் இல்லாதிருப்பதை மனித உரிமை நிறுவனங்கள் சுட்டிக்காட்டி வருகின்றன.

சிறிய படகுகள் மூலம் நாட்டுக்குள் வரும் அகதிகள் மீது அரசாங்கம் எடுக்கப் போகும் நடவடிக்கை தீவிரமாக இருக்கும் என பலரும் எதிர்பார்க்கிறார்கள்.

எந்த நாட்டிலிருந்து அகதிகளாக வருகிறார்களோ அந்த நாட்டுக்கு அவர்களை அனுப்பி வைக்கும் ஏற்பாட்டை பிரதமர் சுனக் ஆதரிப்பதாக இங்கு நம்பப்படுகிறது.





தரமான தங்கத்திற்கு
London-ல் சிறந்த இடம்
LAKSHMIS
JEWELLERS
East Ham, London
வகை வகையான
வடிவங்களில், கண் கவர்
டிசைன்களில்
தங்க நகைகளை
அள்ளிச்செல்லுங்கள்!
புதிதாக தொடக்கும் நகை சேமிப்புத் திட்டத்தில்
மாதம் £ 100 பவுண்ஸ் வீதம் பன்னிரண்டு மாதங்களுக்கு
£ 1200 பவுண்ஸ் செலுத்து £ 1300 பவுண்ஸ்
பெறுமதியான நகையை பெற்றுக் கொள்ளலாம்
25%
வைர நகைகள்
25% விலைக் கழிவில்
பெற்றுக் கொள்ளலாம்
லக்ஸ்மி ஜிவலர்ஸ்க்கு
வேறு எங்கும் கிளைகள்
இல்லை!
Lakshmis Jewellers
276, Hight Street North London E12 6SB
Tel - 020 8470 56 00

# உறவுகளில் சிக்கலை உருவாக்கி

# குடும்பத்தை சீரழிக்கும் மதுப் பழக்கம்

இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில் நாட்டில் நிலவிய கடுமையான பாதுகாப்புக் கெடுபிடிகள், கைதுகள், இன ரீதியான துன்புறுத்தல்கள் காரணமாக லட்சக்கணக்கான மக்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தனர்.

இவ்வாறு புலம் பெயர்ந்தவர்கள், பிரித்தானியா, பிரான்ஸ் உட்பட ஐரோப்பிய நாடுகள், கனடா, அவுஸ்திரேலியா என பல நாடுகளில் புகலிடம் பெற்று அந்நாடுகளில் குடியுரிமையுடன் வாழ்ந்து வருகின்றனர்.

பல கஷ்டங்களுக்கு மத்தியில் லட்சக்கணக்கான ரூபா பணத்தை முகவர்களுக்கு வழங்கி வெளிநாடுகளுக்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் எப்படியான குடும்ப சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றனர் என்பதை அந்நாடுகளில் வாழும் மக்கள் அறிவார்கள்.

வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்த பலர் அந்நாடுகளில் தொழில் புரிந்து தமது குடும்பங்கள் பிள்ளைகளுடன் மகிழ்ச்சியுடன் வாழ்வதுடன் இலங்கையில் உள்ள தமது உறவினர்களுக்கு உதவிகளையும் வழங்கி வருகின்றனர்.

இந்த நிலையில், வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து குடும்பங்களாக வாழும் ஒரு சில குடும்பங்களில் குடும்பத் தலைவனாக இருக்க வேண்டிய ஆண்கள் மது போதைக்கு அடிமையாகி இருப்பதால், அவர்களின் குடும்பங்களில் அடிக்கடி சண்டைகள் ஏற்பட்டு வருகின்றன.

கணவன் மது அருந்தி விட்டு, வந்து தொல்லைகளைக் கொடுப்பதால், மனைவிக்கும் கணவருக்கும் இடையில் அடிக்கடி சண்டை ஏற்பட்டு, அது போலீஸ் நிலையம் வரை செல்லும் அளவுக்கு மோசமாகியுள்ளது.



மது அருந்தி விட்டு வீடுகளுக்கு வந்து, தகராறு செய்யும் கணவன்மார் குறித்து போலீஸ் அவசர அழைப்புத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அவர்களின் மனைவிகள் முறைப்பாடு செய்கின்றனர்.

மது அருந்திவிட்டுத் தகராறு செய்யும் கணவன்மாரை மனைவிமார் வீடுகளில் இருந்து விரட்டி விடுவதால், அவர்கள் வீதிகளிலும், பூங்காக்களிலும் தங்கியிருக்கும் நிலைமையேற்பட்டுள்ளது.

கணவன், மனைவி இடையிலான இப்படியான சண்டைகள் கொலையில் முடியும் சம்பவங்களாகவும் மாறியுள்ளன என்பதை வெளிநாடுகளில் நடந்த சில சம்பவங்கள் உணர்த்தியுள்ளன.

இது வெறும் கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான பிரச்சினை என்று நாம் கருதி விடக்கூடாது. இது தமிழ் மக்களின் கலாசார ரீதியாக குடும்ப கட்டமைப்பை உடைத்து விடக்கூடியது.

மேலும் பெற்றோர் இடையிலான சண்டை காரணமாகப் பிள்ளைகளின் கல்வி, எதிர்காலம் என்பனவும் பாதிக்கப்படும் என மனநல மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

பிள்ளைகள் மன உளைச்சல்களுக்கு உள்ளாகலாம். குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள் காரணமாகப் பிள்ளைகள் வெளியாருடன் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளும் சூழல் உருவாகும் என்பதுடன் அவர்கள் போதைப் பொருள்களுக்கு அடிமையாகி அவர்களின் வாழ்க்கையும் கேள்விக் குறியாக விடலாம்.

எனவே பெற்றோர் தமது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து அக்கறை செலுத்தி, குடும்பத்திற்கு ஒவ்வாத தமது பழக்க வழக்கங்களையும் சண்டை சச்சரவுகளையும் படிப்படியாக குறைத்துக் கொள்ள வேண்டும்.

பிள்ளைகளுக்கு எதிரில் பெற்றோர் சண்டையிடாது. அவர்கள் அமைதியான முறையில் பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

# மனதோடு வாழும் ஐ.தி.சம்பந்தன்

**ஈ.கே. ராஜகோபால்**

## இருக்கும் போது இதயத்தை அணைத்தவர் இல்லாதபோது இமைகளை நனைத்தவர்



அமரர் சம்பந்தனின் மிக நெருங்கிய நண்பர்களில் ஒருவரான புதினம் பத்திரிகையின் ஆசிரியர் ஈ.கே.ராஜகோபால் அவர்களால் எழுதப்பட்ட முதலாண்டு ஞாபகார்த்தக் கட்டுரை இதுவாகும்.

"இருக்கும் போது இதயத்தை அணைத்து, இல்லாத போது இமைகளை நனைக்கின்ற மனிதராக இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறார்" என சம்பந்தன் அவர்களை எம் உள்ளங்களுடன் உறவாட வைத்திருக்கிறார் அன்னாரின் நண்பர் ராஜகோபால்.

சம்பந்தன் அவர்களின் ஆரம்பகாலப் பணிகளிருந்து பிரியும் வரையில் அவர் ஆற்றிய சமுதாய, அரசியல், சமய, அறிவுசால் நூல் வெளியீடுகள், சிறைவாசம் பற்றிய விபரங்களை எல்லாம் தமது எழுத்துத் திறனால் வடித்தெடுத்துத் தந்திருக்கிறார் ராஜகோபால்.

– ஆசிரியர்

இருக்கும் போது இதயத்தை அனைத்து, இல்லாத போது இமைகளை நனைக்கின்ற உயர்ந்த மனிதராக மனதில் இப்போது மௌனமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். லண்டனில் கடந்த மாதம் (3.5.2022) தனது 87 வது வயதில் அமரராகிவிட்ட ஐ.தி.சம்பந்தன்.

தான் வாழ்கின்ற காலத்தில் தன்னலமின்றித் தன்னைச் சுற்றியுள்ள சமூகத்துக்குச் சலிப்பின்றிச் சேவை ஆற்றிய உன்னதமான மனிதர்கள் தான் நினைவுகளில் வாழ்கிறார்கள். அ;பபடியான சிலருள் ஒருவர் தான் அன்னார்.

பேசும் மொழி - பிறந்த மண் - இனம் - சமூகம் - சமயம் - அரசியல் - இலக்கியம் - ஊடகம் என்று பல தளங்களில் கால் பதித்து கடைவி வரை பணி செய்தார்.

அவர் பல முனைப் போராளி. தந்தை செல்வாவின் செல்லப் பிள்ளைகளில் ஒருவர். தமிழரசுக் கட்சியின் உண்மைத் தொண்டர். ஒரு காலத்தில் அந்த மேடைகளில் இவர் குரலும் ஒலிக்கும். கொழும்பில் இலங்கை துறைமுக அதிகார சபையில் பணியாற்றிய காலத்தில் தொழிற் சங்க வாதியாக செயல்பட்டுத் தமிழ் ஊழியர்களுக்காகப் போராடியதில் அவர் பங்களிப்புக் குறிப்பிடத்தக்கது.

அரை நூற்றாண்டுகளுக்கு மேலாகின்றன. கந்தரோடையில் இருந்து யாழ். செங்குந்தா இந்து கல்லூரியில் ஆசிரியராக இருந்த 'சிற்பி' சரவணபவன் அவர்கள் 'கலைச்செல்வி' என்ற மாத இழ வெளியிட்டு வந்தார். ஈழத் தமிழர்கள் மத்தியில் மிகப் பிரபலமான இலக்கியத் திங்கள் இதழாகத் திகழ்ந்தது. சம்பந்தன் 'சிற்பி'யுடன் இணைந்து பணியாற்றிய அக்காலங்கள், அவருக்கு ஊடகத் துறைக்குள் அடி எடுத்து வைக்கும் 'பயிற்சி'யை அளித்தது.

இளையவர்களாக அப் பண்ணையில் ஆரம்பித்த திருச்செல்வம், என் போன்றவர்களுக்கும் 'கலைச்செல்வி'யுடன் கழித்த அக் காலத்தில் சம்பந்தன் அறிமுகம் கிடைத்ததை எப்படி மறக்க முடியும்? அப்போது அன்பாகப் பேசும் போது முகத்தில் மலரும்

புன்சிரிப்பும், கனிவான சொற்களும், இறுதிவரை மாறாத கலகலப்பான பழகும் பண்பும் மனதோடு வாழ்கின்றன. 'ஈழநாடு' ஆசிரியர் குழுவில் சேர்த்து பணியாற்றிய காலத்தில் என்னையும், நண்பர் திருச்செல்வத்தையும் சந்திக்க வருவார். என்னிடம் சில செய்திகளைத் தருவார். பிரச்சனைகள் இல்லாத செய்திகளாக இருப்பதால், கவனமெடுத்துப் பிரசுரத்துக்குக் கொடுப்பேன். தன்னை முதன்மைப்படுத்தி அவர் செய்திகளைக் கூட எழுதுவதில்லை. பெற்றெடுத்த காரைநகர் மண்ணின் மீது அளவு கடந்த பற்றுக் கொண்டிருப்பதை அவதானித்திருக்கிறேன். ஒவ்வொரு சந்திப்பிலும் தான் பிறந்த ஊரைப் பற்ற ஒரு வரியாவது என்னுடன் பேச மறப்பதில்லை. யாழ்ப்பாண நகரத்தில் சிறிய இடமொன்றை வாடகைக்கு எடுத்து 'சுடரொளி' என்ற சொந்த அச்சகமொன்றை ஆரம்பித்திருக்கிறார். 'தமிழ் தந்த தாத்தாக்கள்' - 'செந்தமிழ் வளர்த்த செம்மல்' என்ற நூல்களை வெளியிட்டார். லாப நோக்கற்று - தனது அரசியல் கருத்துக்களை பிரசுரங்களாக நூல்களை வெளியிட்டார். லாப நோக்கற்று - தனது அரசியல் கருத்துக்களை பிரசுரங்களாக வெளியிட்டதைப் பொறுக்காத ஒரு சிலர் அவரது அச்சகத்தை தொடர்ந்து இயங்காமல் சிதைத்து விட்டனர்.

கொழும்பில் நாவலர் சபையில் செயலாளர்களில் ஒருவராக - நாவலருக்குச் சிலை நிறுவது போன்ற முக்கிய செயற்பாடுகளில் தீவிரமாகச் செயலாற்றியவர்.

இலங்கை துறைமுக அதிகார சபையில் அவர் பணியாற்றினார். தொழிற்சங்க அலுவல்களில் பங்காற்றினார். தமிழ் அரச ஊழியர்களுக்கு நிகழ்த்தப்படுகின்ற அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுத்தார். பத்திரிகைகளில் அறிக்கைகளும், செய்திகளும் அடிக்கடி வெளிவரும். அப்போது 'தினகரன்' நாளிதழில் ஆசிரியர் குழுவில் பணியாற்றியதால் பல சந்தர்ப்பங்களில் பேசி - பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தன.

அரசியல் போராட்டங்களில் அகிம்சையாகவும், அடக்குமுறைக்கு எதிராக சாத்வீகமாகவும் கிளர்ந்தெழுந்த போது, பயங்கரவாதச் சட்டத்திற்கு கீழ் கைதாகி, யாழ்ப்பாணச் சிறையில் ஈழவேந்தன். இரகுபதி பாலஸ்ரீதரன் ஆகியோருடன் அடைக்கப்பட்டார்.

லண்டனுக்குக் குடும்பத்தோடு புலம்பெயர்ந்த பின்னர் தாயகத்தில் ஆற்றிய அதே பணிகளைத் தொடர்ந்தார். தாயகத்தின் 'சுடரொளி'யை மீண்டும் ஒளிரச் செய்தார். 'சுடரொளி' சஞ்சிகையும் மலர்ந்தது. தன் கருத்துக்களை எழுதினார். இருபதுக்கு மேற்பட்ட ஈழத்து எழுத்தாளர்களது படைப்புக்களை வெளியிட்டு இருக்கிறார். இதுவரை தந்தை செல்வா உட்பட ஏழு நூல்களை எழுதியிருக்கிறார். கறுப்பு யூலை - 83 குற்றச்சாட்டுகள் என்ற அவர் எழுதிய நூல், தமிழர்களுக்கு சிங்களக் காடையர்கள் நிகழ்த்திய கொடூரமான பேரழிவை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

லண்டனில் சம்பந்தன் தமிழரசுக் கட்சியின் கிளையை சட்டத்தரணி இரத்தினசிங்கம்ஷ சமூக ஆர்வலர் போஸ் ஆகியோருடன் முன்னின்று ஆரம்பித்து, இறுதிவரை அதன் தலைவராக செயல்பட்டார். வாரத்தில் ஒரு நாளாவது தொலைபேசியில் பேசுவோம். அரசியல் கருத்துக்களில் முரண்பாடுகள் இருந்தாலும் அவர் தனது கருத்துக்களைத் திணித்ததில்லை. நல்லவைகளைப் பேசுவார். குறைகள் சொல்ல மாட்டார். ஊடகத் துறைப் பயணத்துக்கு ஊக்கத்த அளித்தார். அவரவர் சம்பந்தப்பட்ட விஷயங்களோடு பொதுவானவற்றைப் பேசுவார்.

பதினேழு ஆண்டுகளுக்கு முன்னர், திடீரென்று ஒரு நாள் மதியம், ஊடக ஆசான்களில் ஒருவரான பொன் பாலசுந்தரத்துடன், சம்பந்தன் வீடு வந்து ஹோட்டல் ஒன்றுக்கு அழைத்துச் சென்றார்கள். "இன்று சம்பந்தனின் 70வது பிறந்த தினம். நல்ல உள்ளம் கொண்ட ஒருவருடன் உணவருந்த விரும்பினார். அது தான் உங்களைக் கூட்டி வந்திருக்கிறோம்" என்றார் பாலா அண்ணை. இது போன்று, மனிதர்களை நேசித்த இதயம் அவருடையது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் உணிராக நேசித்த மனைவி இறந்த போது தளர்ந்து போனார். ஆனாலும் அவருடைய முத்தான மூன்று ஆண் பிள்ளைகளின் அணைப்போது பொதுச் சேவையை அவர் கைவிடவில்லை.

ஈழத் தமிழர்களுக்காக அர்ப்பணிப்போடு பல பணிகளைத் தொடர்ந்து செய்தவர் சம்பந்தன். வணங்குகிறேன் அவர் ஆத்மா சாந்தியடைய அஞ்சலிக்கிறேன்!



VS·CO
VS.CO CASH & CARRY
இலங்கை, இந்திய மளிகைப் பொருட்கள்,
பசுமையான மரக்கறிகள், கடல் உணவுப் பொருட்கள்
குளிர்பானங்கள், மிக்ஸி, கிரைண்டர்
மற்றும் பாத்திர வகைகள் புதுவரவு பூசை பொருட்கள்,
அனைத்துக்கும் புதுபொலிவோடு அமைந்திருக்கின்றது.
VS·CO Cash & Carry
VS·CO
& Carr
பாரிஸ் நகரில்
வெள்ளி விழாவை தாண்டி
வெற்றிகரமாக 27 வருடங்களாக
வாடிக்கையாளர்களின் ஆதரவு
மற்றும் பேரன்புடன் இயங்கி
கொண்டிருக்கும் ஒரே நிறுவனம்
vs co cash & carry
La Vie Claire
LA BIO CLAIREMENT ENGAGÉE
19 Rue Cail,
75010, Paris
VS.CO
Vente en Gros-Wholesale
Alimentation et Accessoires
Sri Lanka-Inde-Pakistan-Ile Maurya- reunion
Zac enttree sud 1 rue jean mermoz
95500 Gonsse
197, RUE DU FAUBOURG
SAINT - DENIS 75010 PARIS
FRANCE
Tel : (+ 33 ) 01 40 34 71 66
Email : vsco@vsco.fr
web : vsco-shop.fr
Nandhi
தரம், சுவை,
இவை அனைத்தும் ஒழுங்க
சேரப்பெற்றதே
நந்தி Mark தயாரிப்புகள்...
Shan
SAKTHI
ASHOKA
PATAKS
Haldiram's
Gits
Aachi
MTR
ESPIG
priya
Since 1980
TRS



# மணமகன்–மணமகள் பட்டாடை அணிவது சம்பிரதாயம்



சுபமுகூர்த்தத்திற்கும், சுப தின வைபவங்களுக்கும் தூய பட்டு அணிய வேண்டும் என்பது தமிழர்களின் பாரம்பரியங்களில் முன்னிலை பெற்றிருப்பதைக் காணலாம்.

இதன் பின்னணியில் சமயாசார சம்பிரதாயங்களும், ஆன்மீகமும் மலர்ந்திருப்பதை நாம் பார்க்கலாம். இவற்றை அறிந்திருப்பவர்களும், அறியாதிருப்பவர்களும் திருமணங்களிலும் ஆலய உற்சவங்களிலும், பூசைகளிலும் பட்டிலான ஆடைகளை அணிவதைக் காணலாம்.

தூய பட்டு ஆடைகள் இறை சக்தியை ஈர்த்து அளிப்பதாக நம்பப்படுகிறது.

ஆண்கள் பட்டுவேட்டிப் பிரியர்கள், அவர்களுக்கு நிகராகப் பெண்களும் பட்டுச் சேலைகளை அணிந்து விசேட வைபவங்களில் ''சக்திகளாக' வலம் வருகிறார்கள்.

ஆன்மீக சக்தியும், பிரபஞ்ச சக்தியும், மின் கதிர் சக்தியும் பட்டில் இருப்பதாக ஐதீகம் இருப்பதும் பட்டிலான வேட்டி சேலையை அணிவதற்கு ஒரு காரணமாக இருப்பதாகவும் மக்கள் நம்புகிறார்கள்.

ஆலயங்களில் நடைபெறும் கும்பாபிஷேக விழாக்களில் செய்யப்படும் யாக பூசைகள், யாகங்கள், மந்திர ஒலிகள் பட்டாடைகளுடன் செல்பவர்கள் மீது ளெதிக்கப்படும் புனித தீர்த்தமும் இறைசக்தியை ஏற்படுத்த உதவுவதாகவும் கருதப்படுகிறது.

இக்காரணங்களின் பின்னணியில்தான் திருமண வைபவங்களில் மணமகன் - மணமகள் இருவரும் பட்டாடை அணிந்து கொள்கிறார்கள்.

பாரம்பரியம், மரபு, கலாச்சாரத்தைப் பேணிப் பாதுகாத்துவரும் இந்தியா, இலங்கையில் பட்டாடைகள் அணிந்து பவனிவரும் திருமணங்கள் நடைபெற்று வரும்போது இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து சென்றவர்கள் வசிக்கும் பிரித்தானியா, பிரான்ஸ், கனடா, அவுஸ்திரேலியா உட்பட மற்றும் நாடுகளிலும் இந்தப் பட்டாடைக் கலாச்சாரம் இன்று பரவி வருவதைக் காணலாம்.

இன்றைய தமிழரான இளம் தலைமுறையினர் இப்படியான சம்பிரதாயங்களைப் பின்பற்றி வருவது தமிழர்களின் பாரம்பரியம் வளர ஒரு நல்ல அறிகுறியாகும்.


வீட்டிற்கு ஒரு சீமைக்குரல்
உங்கள் வீடு தேடி வர...
சந்தாதாரர் ஆகுங்கள்...

கீழ்கண்ட எண்ணிற்கு உங்கள் விபரத்தை அனுப்பி வைக்கவும்.
1 வருடத்தில் நான்கு முறை £ 20.00 மட்டும்
0044(0) 7710 64 63 59
Email: admin@seemaikural.com
BANK DETAILS:
Bank : Natwest bank
House of Seemai Kural
Account Number : 21111944
SODE Code : 52 - 10 - 33



# தமிழறிஞர் கோபன் மகாதேவா மறைவு

ந. சச்சிதானந்தன்

பிரபல பொறியியல் - கட்டடக் கலைஞரும், தமிழ் அறிஞருமான பேராசிரியர் கோபன் மகாதேவா அவர்கள் இலண்டனில் காலமானார்.

யாழ்பாணத்தின் பெருமைமிகு சந்தைக்கான கட்டடத்தை நிறுவிய பெருமைக்குரியவர்.

பொறியியலாளராகப் பேராதெனிய பல்கலைக் கழகத்தில் இளம் வயதில் சிறப்புச் சித்தி பெற்ற பெருமைக்குரிய இவர் தமிழ் - ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் புலமை பெற்றவராகவும், பற்றுள்ளவராகவும் இருந்ததுடன் அவற்றின் வளர்ச்சிப் பணிகளுக்கும் தம்மை அர்ப்பணித்திருந்தார்.

பொறியியல் துறையில் சிறப்பு ஆய்வாளராக முத்திரை பதித்த இவர் பேர் மிங்காம் பல்கலைக்கழக அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி சபையின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

இலண்டனில் தமிழ்ப் பணி புரிவதில் அக்கறை கொண்டிருந்த கோபன் மகாதேவா அவர்கள் பல தமிழ் சங்கங்களுடன் இணைந்தும், பிணைந்தும் செயலாற்றியவர். மரபுக் கவிதைகளை எழுதுவதில் தமது தமிழ் ஆர்வத்தை மக்கள் முன் பதித்தவர். இவரது படைப்புக்கள் அனேகம் நூல்களாக வெளி வந்துள்ளன. "செஞ்சரி ஹவுஸ்" என்ற பிரசுர நிலையத்தை நிறுவி தமிழ் வளர்த்த பெருமைக்கு உரியவர்.

"ஈழத்தவர் இலக்கிய வட்டம்" என்ற அமைப்பை நிறுவி அதன் மூலம் தமிழர்களுக்கு இலக்கிய விருந்தளித்தவர் இவர். "பூந்தளிர்" என்னும் ஏுங்சிகை மூலம் அனேக இலக்கியவாதிகளின் ஆக்கங்களைப் பிரசுரித்து அவர்களின் இலக்கிய தாகத்தைப் போக்கியவர் என்று கூறலாம்.

ஆங்கிலத்திலும் கவிதை எழுதுவதில் வல்லவர் என்பதை அறிந்த ஆங்கிலக் கவிஞர்களின் அமைப்புக்கள் இவரை அணுகி ஆங்கிலக் கவிதைகளை ஆய்வு செய்தது மட்டுமன்றி ஒரு ஆங்கிலக் கவிஞர்கள் சபை தமது கவிஞர்கள் சபைக்கு தலைவராகவும் நியமித்ததை இங்கு பெருமையாகக் குறிப்பிடலாம்.



# யேசுநாதர் ஆலயத்தில் புத்தரா?

## திருமாவளவன்

## இந்திய அரசு தலையிட வேண்டும் பிரேரணை முன்வைப்பு



தமிழர் வதியும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அத்துமீறி நடமாடிய புத்தர் இப்போது கடல் கடந்து சென்று கச்சதீவில் முகாமிட்டிருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

மர்மமான முறையில் அதாவது மர்மமாகக் குடிகொண்டருப்பதாக் கூறப்படுகிறது.

காலாதி காலமாக யேசுநாதர் மட்டும் வசித்து வந்த ஒரு தீவில் புத்தர் எப்படிக் குடியேறினார்? அவருக்கு அங்கு குடியேறும் உரிமையை வழங்கியவர்கள் யார் என்பவை மர்மமாகவே உள்ளன.

புத்தரின் அத்துமீறிய பிரவேசம் இந்திய பாராளுமன்றத்திலும் ஒலிக்க இருக்கிறது. அதற்கான ஒரு பிரேரணையை விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் அவத்ாகள் கமர்ப்பித்துள்ளார்.

கச்சதீவில் புத்தரைக் கொண்டுவந்திருப்பதன் நோக்கம் மதக் கலவரத்திற்கு அடித்தளம் அமைக்கும் செயல் எனக் கண்டித்திருக்கும் திருமாவளவன் மேலும் இதுபற்றிக் கூறியதாவது-

காலாதி காலமாகக்கச்ச தீவில் அந்தோனியார் தேவாலயம் மட்டும்தான் இருந்ததை உலகம் அறியும் வருடாவருடம் கத்தோலிக்க மக்கள் சென்று திருவிழாச் செய்வார்கள். கிறிஸ்தவர்களை அங்கிருந்து விரட்டியடிக்க சிங்கள இன-மத வெறியர்களால் புத்தர் சிலை அங்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இது தமிழ் நாட்டுத் தமிழர்கள் மற்றும் ஈழத் தமிழர்களுக்கு எதிரான செயல் மட்டுமல்ல அவர்களின் மத உரிமைகளுக்கு எதிரான செயலாகவும் உள்ளது. இச்செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

புத்தர் சிலையை அங்கிருந்து அகற்றிய மதநல்லிணக்கத்தை மீட்டெடுக்க இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்புத் தீரமான மனுவை சமர்ப்பித்துள்ளேன்.



## சனிப் பெயர்ச்சியில் தடுமாறும்

# திருக்கணிதமும் வாக்கியமும்

சனிப் பெயர்ச்சியால் சோதிடர்கள், சோதிட ஆய்வாளர்கள், ஆலயங்கள், உட்பட பொதுமக்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் மத்தியில் சோதிடக் கணிப்பில் முக்கியமாகக் கருதப்பட்டு வந்த திருக்கிதமும், வாக்கிய பஞ்சாங்கமும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட மாதங்களை வெளியிட்டிருப்பது இக்குழப்பத்திற்கு அடிப்படைக் காரணமாக உள்ளது.

திருக்கணிதம் ஜனவரி 17ல் என்றும், வாக்கியம் டிசம்பர் 20ம் திகதி எனவும் சனிப் பெயர்ச்சி ஏற்படுவதாகக் கூறுகின்றன. இந்தக் கணிப்பு ஒன்றிற்கொன்று முரண்பாடாக இருப்பதைக் காணலாம்.

தமிழக ஆலயங்களில் பெரும்பாலும் திருக்கணித கணிப்பின்படி உற்சவங்களுக்கான தினங்கள் நிர்ணயிக்கப்படுவதால் அதையே நடைமுறைப்படுத்த வேண்டும் என உலகத் தமிழியல் ஆய்வுமன்றம் தமிழ்நாடு அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

13ம் நூற்றாண்டு வரை திருக்கணித கணிப்பின்படி நடைமுறைகள் அனுஷ்டிக்கப்பட்டு வந்திருப்பதும், இவை மயன் கால மதிப்பீடாக இருந்ததாகவும் ஆர்யபட்டரால் பின்பற்றப்பட்ட ஒன்றாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இரண்டு பஞ்சாங்கங்களுக்கும் இடையில் உள்ள கணிப்பின் வேறுபாட்டையும் சுட்டிக் காட்டியும் உள்ளார்கள்.

திருக்கணிதம் ஒருநாட்டில் உள்ள ஊர்களின் தூரத்திற்கு அமைய ஏற்படும் நேர வேறுபாட்டை கணக்கிட்டு அதற்கமைய கிரக மாற்றங்களை அறிந்து துல்லியமாக கணக்கிடுவதாக கூறுகிறது.

அதே சமயத்தில் வாக்கிய பஞ்சாங்கமோ ஒரு நாட்டின் பொதுப்படையான நேரத்தை பொதுப்படையாக கணிப்பதாகவும் அதனால் முரண்பாடுகள் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.



# நடிகை டாப்ஸி மீது போலீசில் பரபரப்பு புகார்! காரணம் இது தானா?

சமீபத்தில் டாப்ஸி ஃபேஷன் நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளார். அங்கு அவர் கவர்ச்சியான ஆடையில் அம்மன் உருவம் பொறித்த நெக்லசை அணிந்து சென்றுள்ளார். இதற்கு பலரும் சமூக வலைத்தளங்களில் கண்டனம் தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில் ஏகலைவா சிங் கவுர் என்பவர் நடிகை டாப்ஸி மீது போலீசில் புகார் அளித்துள்ளார். நடிகை டாப்ஸி இந்து மத உணர்வுகளை புண்படுத்திவிட்டார் என்று அந்த புகாரில் தெரிவித்துள்ளார். தற்போது இந்த விவகாரம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


R
RAGU ESTATE AGENTS
வீடுகள் வாங்க, விற்க,
விட்டைப் பாரமரிக்க,
வாடகைக்கு விட மற்றும்
அனைத்து
வித விட்டுக்கடன்
வசதிகளுக்கும் உடனே
நாடுங்கள்!
Sales
Lettings
Mortgages
Constructions
Property Management
நம்பிக்கையான நாணயமான மற்றும்
தரமான சேவைக்கு இன்றே நாடுங்கள்!
127, Eastern Avenue,
Redbridge Essex IG4 5AF
Tel - 020 8503 9836
258, High Street North
Manor Park, London E12 6SB
Tel - 020 8586 2323
020 8586 2323
020 8503 9836
ragu_travels@hotmail.com




# ஹறோவின் பின்னர்

கவுன்சிலர் திரு. குககுமரன்

பிரித்தானியாவின் மாநகர சபைகளுடன் பல வருடங்கள் அனுபவம் பெற்ற திரு. குககுமரன் கனகசபாபதி ஹறோ பகுதியின் பின்னர் மாநகர சபையின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் யாழ்ப்பாணம் அல்வாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இலண்டனுக்கு வந்த காலத்திலிருந்து சமூக சேவை, மக்கள் பணி போன்றவற்றுடன் இணைந்தும் பிணைந்தும் வாழ்வாதார மேம்பாட்டிற்காகத் தொண்டாற்றியவர்.

கணினி செயல்துறை ஆலோசகராகவும், அரசு-தனியார் நிறுவனங்களின் அனுபவஸ்தாராகவும் 25 வருடங்கள் பணிபுரிந்தவர். இந்த அனுபவத்தின் மூலம் இலண்டன் நகரசபைகளுக்கு இவர் உதவி வந்திருப்பதை பலரும் பாராட்டுகிறார்கள்.

குறிப்பாகத் தொழில் நுட்பத் துறையில் குககுமரனுக்கு உள்ள இன்றைய அனுபவம் நாளைய எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வுக்கு மலர்ச்சி தரும் என இவரைப் பாராட்டி வருகிறார்கள் என்பதையும் இங்கு குறிப்பிலாம்.

அனுபவமும், ஆற்றலும் நிறைந்த திரு. குககுமரன் இலண்டன் கன்ஸர்வேற்றிவ் கட்சியின் சார்பில் சமீபத்தில் நடைபெற்ற உள்ளூர் ஆட்சித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளது மகிழ்ச்சிக்குரியது.

ஹறோ மாநகர வட்டாரங்களில் முக்கிய அங்கத்தவராகவும், இரவு பகலாக மக்களுக்கு உழைப்பவருமாகவும் கருதப்படும் இவர் எதிர்காலத்தில் இப்பகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக வரக்கூடிய தகுதியுள்ளவராக இருக்கிறார் எனவும் இப்பகுதி மக்கள் கூறுகிறார்கள்.

இப்படி இன்னும் பல தமிழ் உறவுகள் இலண்டன் மாநகர சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். வண்ட்ஸ்வேத் சபைக்கு உதவிமேயராகத் தமிழ்ப் பெண்ணான ஷர்மிலாவரதராஜன் தெரிவு செய்யப்பட்டிருப்பதை இங்கு குறிப்பிடலாம்.

# காட்டுக்குள் அநாதரவாகி மறைந்து வாழ்ந்த முன்னாள் போராளி!

## நமது கடமை என்ன?



பாலா..! அவர் ஒரு போராளி - இன்றைய தலைமுறையின் வார்த்தையில் சொல்வதானால் முன்னாள் போராளி தனது தாயக மக்களின் சுதந்திர வாழ்வுக்காக - உரிமைகளுக்காக - நஞ்சை கழுத்தில் அணிந்து ஆயுதங்கள் சுமந்து சமர்க்களங்களிலும் - அடர்காடுகளிலும் சலிக்காது - சளைக்காது போரிட்ட வீரர். ஆனால், எல்லாமே கனவாகிப் போய்விட்ட இன்றைய நிலையில் மனநோயாளியாகிப் போன அவர் கடந்த நான்கு ஆண்டுகள் கவனிப்பாரின்றியும் பராமரிப்பின்றியும் காட்டுக்குள் வாழ்ந்த நிலையில் தற்போது மீட்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் தாந்தாமலைக் காடு அடர் காடு மட்டுமல்ல - யானைகள் உலவும் காடும் அயல் கிராமத்தவர்களே தனியே நுழையவும் அஞ்சும் காடு. இத்தகைய காட்டுப்புறத்தில்தான் கைவிடப்பட்ட - இடிந்து விழும் நிலையிலுள்ள தகரத்தால் கூரை போட்டு வாழ்ந்துள்ளார். அந்தப் போராளி யுத்த களத்திலும் காடுகளிலும் அலைந்து திரிந்ததாலோ அல்லது மனநோயாளியாகிப் போனதாலோ அல்லது நன்றி மறந்த இந்த மனிதர்களிடம் இருந்து விலகியிருக்கும் விருப்பாலோ என்னவோ அவருக்கு தான் இருக்கும் இடத்தின் ஆபத்து புரியவில்லை என்று எண்ணத் தோன்றுகிறது.

மக்களிடம் இருந்து அந்நியப்பட்டு ஓடி ஒளந்து வாழ்ந்த அவருக்கு அவ்வப்போது உணவையும் - உணவுப் பொருட்களையும் சிலர் வழங்கி வந்துள்ளர். தன்னை உணரும் நிலையில் இல்லாததால் ஒழுங்காக உணவு உண்ணாமல் மெலிந்தும் - சோர்ந்தும் கவனிப்பார் இல்லாததால் நீண்ட தலைமுடியும் தாடியும் கொண்டவராகவும் அசுக்குப் படிந்த உடலில் ஊத்தை படிந்த உடையை அணிந்துகொண்டும் இருந்துள்ளார். போர் வீரனாக தூய்மையான வாழ்வை அனுபவித்த அவருக்கு இது புரியாத நான் எப்படி இருக்கிறேன் என்பதை விளங்காத நிலை.

இந்தத் தருணத்தில்தான் இவர் பற்றி அறிந்த - அவருடன் போர்க் களத்தில் தோளோடு தோள் நின்றவர்கள் அவரை மீட்டுள்ளனர். சுமார் மூன்று நாள் முயற்சியின் பின்னரே அவர் அவர்களுடன் பேசினார். இதைத் தொடர்ந்து அவரை சுத்தப்படுத்தி - புதிய உடைகளை அணிவிக்கச் செய்து மனநல மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ப்பித்துள்ளனர் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர்.

போர் மௌனிக்கப்பட்டு 13 ஆண்டுகளை கடந்து விட்ட நிலையிலும் தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடிய பல வீரர்களின் கதைகள் பாலாவின் கதையை ஒத்ததாகவே இருக்கின்றன. தனது இனத்துக்காக - தனது மக்கள் விடுதலைக் காற்றை சுவாசிக்க வேண்டும் என்ற உயரிய - இலட்சியத்துடன் ஆயுதம் தரித்தவர்கள் பலர் இன்று தாயகத்தின் ஏதோ ஒரு மூலையில் தங்களின் வாழ்வாதாரத்துக்காக இன்னொருவரை சார்ந்தோ அல்லது வேறொருவரிடம் கையேந்த வேண்டிய நிலையிலோ வாழ்கின்றனர்.

தமிழ் மக்களின் விடுதலைக்காக தம் இளமை - கல்வி - தொழில் - வசதி வாய்ப்புகள் - சொத்துக்களை தியாகம் செய்த இவர்களில் பலரின் வாழ்வு இன்னும் சூனியமாகவே உள்ளது. இவர்களைப் போன்றே தாயகத்தின் விடுதலைக்காக மாவீரர்களானவர்களின் பெற்றோர்களும் இன்று அநாதரவான நிலையில் முதியோர் இல்லங்களிலும் - குடிசைகளிலும் - குடியிருக்க இடமின்றி வீதிகளிலும் தவிக்கிறார்கள். முதுமை அசூத்த - வேதனைகள் நிறைந்த வாழ்வை - சுமக்க மாட்டாமல் வாழும்



மாவீரர்களின் பெற்றோரும் - கணவன் வீரச்சாவு எய்த பின்னர், பிள்ளைகளுக்காக ஓடாகத் தேய்ந்து கொண்டிருக்கும் போராளிகளும் எந்த உதவிகளுமின்றி தவித்து இருக்கிறார்கள்.

தமிழினத்தின் வாழ்வுக்காக தங்கள் வாழ்க்கையையே ஒட்டுமொத்தமாக இழந்து நிற்கும் இவர்களின் வாழ்வுக்காக தமிழினம் சிந்திக்க வேண்டும் என்பதை உணர்த்தியிருக்கிறது பாலாவின் வாழ்க்கை கதை. விடுதலை போராட்டத்தில் இணைந்து தாயக மீட்பக்காக போராடிய ஒரு பகுதியினருக்கு புலம்பெயர் உறவுகளின் உதவிகள் கிடைத்தன - கிடைத்து வருகின்றன. ஆனால் இன்னொரு பகுதியினருக்கு எந்த உதவிகளும் கிடைப்பதில்லை. இன்னும் சிலருக்கு உதவிக்கு மேல் உதவிகள் கிடைத்து வருகின்றன. இதனிடையே போராளிகளின் பெயரால் மோசடி - ஏமாற்று சம்பவங்களும் இடம் பெற்று வருகின்றன.

இவற்றுக்கு அடிப்படை புலம்பெயர்ந்து வாழ்பவர்களிடையேயும் - அவர்களின் உதவிகளும் சரியான முறையில் கட்டமைக்கப்படவில்லை. இதேபோன்று தாயகத்திலும் உதவிகளை பெறுவோரிடத்திலும் கூட சரியான கட்டமைப்பு எதுவுமில்லை. இவ்வாறான நிலையில், இரு சாராரும் தங்களிடையே ஒரு வலுவான கட்டமைப்பை ஏற்படுத்துவது அவசியமாகின்றது. உதவிகள் இவ்வாறு நிறுவனமயப்படும்போது அனைத்து போராளிகளும் - போராளிகளின் குடும்பங்களும் - மாவீரர்களின் பெற்றோரும் நன்மைகளை - பலன்களை பெறுவதற்கான வாய்ப்புகள் - சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன. அதே நேரத்தில் பாலா போன்று கவனிப்பாரின்றியும் - பராமரிப்பின்றியும் கைவிடப்பட்ட போராளிகளை அவர்களே அரவணைக்கவும் அல்லது அவர்களுக்கு பாதுகாப்பளிக்கவல்ல நிலைமை ஒன்றை ஏற்படுத்தவும் முடியும்.

பாலா போன்றவர்களின் இன்றைய நிலைமை உணர்த்துவது இதைத்தான் இத்தகைய கட்டமைப்பு மாற்றமே இன்றைய காலத்தின் தேவையும் இதை உணர்ந்து முதல் காலடியை எடுத்து வைப்போமா..? உறவுகளே


உங்கள் விளம்பரம் சீமைக்குரலில் இடம் பெற தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்

07710 64 63 59

Email: admin@seemaikural.com

# யாழ். திருநெல்வேலி மக்கள் ஒன்று கூடல்விழா

## விம்பிள்டனில் நடந்த உறவுகளின் சங்கமம்

இலண்டனின் பல பாகங்களிலும் வசிக்கும் யாழ் - திருநெல்வேலியைச் சேர்ந்தவர்களின் ஒன்று கூடல் கொண்டாட்டங்கள் இரு வாரங்களுக்கு முன்னர் வெகு மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடப்பட்டது. பலபாகங்களில் இருந்தும் ஏராளமானோர் தமது குடும்பத்தினர் புடைசூள வந்து கலந்துகொண்டனர்.

புலம்பெயர் நாடொன்றில் நமது மண்ணை நினைக்கவும், சொந்த பந்தங்கள் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும், நாட்டு நிலை பற்றி மனம் விட்டுப் பேசவும், ஆலய உற்சவங்கள் பற்றி ஆராயவும் இப்படி ஊர்ப் புதினங்களை ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்ளவும் இந்த ஒன்று கூடல் வசதியாக இருந்ததென்றே கூற வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் அறிமுகமான குடும்பங்கள் பல இந்த நாட்டுக்கு வந்த பின்னர் தொடர்பற்ற நிலையில் இருந்திருக்கிறார்கள். அப்படியானவர்களை ஒன்றிணைக்கும் உறவுப் பாலமாகவும் இந்த ஒன்று கூடல் அமைந்துள்ளதைக் காணக் கூடியதாக இருந்தது.

இந்த ஒன்று கூடலில் ஒரு அபூர்வ சந்திப்பை இங்கு குறிப்பிடலாம். ஆறுமுக நாவலர் அவர்களின் ஐந்தாம் தலைமுறையைச் சேர்ந்த திருமதி. மைத்ரேயி யோகரத்தினம் என்பவரும் இந்த ஒன்று கூடலுக்கு வந்து சிறப்பித்திருந்தார். அமைதியாக வந்து அதே அமைதியுடன் திரும்பி விட்டதாகக் கூறப்படுகிறது.

பலவகைச் சிற்றுண்டி உபசாரத்துடன் ஆரம்பமான ஒன்று கூடல் நிகழ்வில் கல்யாண சமையல் சாப்பாட்டிற்கு நிகரான அறுவை உணவும் தாராளமாக வழங்கப்பட்டதெனலாம்.


திருமதி. மைத்திரேயி யோகரத்தினம்

அத்துடன் வீடுகளுக்கும் கொண்டு செல்வதற்கும் ஏற்பாடாகியிருந்தது.

விம்பிள்டன் சமூக மண்டபத்தில் இந்த ஒன்று கூடலுக்குத் திருவாளர்கள் திருக்கேதீஸ்வரன், ஜெயதீசன், செல்வகுமார் ஆகியோர் ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள்.


படம் - பாமா தமயந்தரன்

## அமெரிக்க அழகிகளுடன்
# கைலாசாவில் நித்தியானந்தா





நித்தியானந்தா தானே நிறுவினார் என்று கூறும் கைலாசா நாடு அமெரிக்காவின் 30 நகரங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இந்தியாவில் பாலியல் வழக்குகளில் சிக்கி தப்பியோடி தலைமறைவான நித்தியானந்தா உலகின் முன்னணி நாடான அமெரிக்காவின் 30 நகரங்களுடன் ஒப்பந்தம் செய்து சாதித்தது எப்படி என்ற கேள்வி அந்த நாட்டையே உலுக்கி வருகின்றது.

### யார் இந்த நித்தியானந்தா?

தன்னைத் தானே கடவுள் என்று கூறிக் கொள்ளும் நித்தியானந்தவைப் பற்றிய சர்ச்சைகளுக்குப் பஞ்சமே இல்லை. பிரபல நடிகையுடன் இவர் அந்தரங்கமாக இருப்பது குறித்து வெளியான காணொலிகள் தமிழ்நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தின. இதன் பின்னர் அங்கிருந்து வெளியேறி, பெங்களூரின் பிடதி என்ற இடத்தில் ஆசிரமம் அமைத்து அங்கிருந்து இயங்க ஆரம்பித்தார். இந்த நிலையில் சைவ மக்களின் பழமையான ஆதினமான மதுரை ஆதினத்தின் வாரிசாக அறிவிக்கப்பட்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த சர்ச்சை ஓய்வதற்குள் பாலியல் வல்லுறவு பாலியல் துன்புறுத்தல்களில் சிக்கிக் கொண்டார். இதனால், எழுந்த நெருக்கடிகளைத் தொடர்ந்து அவர் 2019ஆம் ஆண்டு இந்தியாவை விட்டே தப்பிச் சென்றார். அப்போது முதல் அவர் எங்கே இருக்கிறார் என்று இதுவரை தெரியவில்லை.

### கைலாசா நாடு பிரகடனம்

தலைமறைவாகியிருந்த நித்தியானந்தா 2019ஆம் ஆண்டின் இறுதியில் இந்துக்களுக்கு என்று தனி நாட்டை உருவாக்கி இருப்பதாக திடீரென அறிவிப்பை வெளியிட்டார். கைலாசாவின் இணையத்தளம் என்று கூறப்படும் தளத்தில் கைலாசா என்பது “எல்லைகள் இல்லாத தேசம்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தங்கள் சொந்த நாடுகளின் முறைப்படி இந்துத்துவத்தை கடைப்பிடிக்க முடியாத - உலகம் முழுவதும் வாழும் இந்துக்களுக்கான நாடு இது என்றும் கூறப்பட்டுள்ளது.

அவரிடம் இருப்பிடம் எங்கே என்று அறியப்படாத நிலையில் இந்த இணையத்தளம் வாயிலாக அவரின் போதனைகள் - கருத்துக்கள் அடங்கிய காணொலிகள் அவ்வப்போது வெளியிடப்படுகின்றன.




### இரட்டை நகர ஒப்பந்தம்

நித்தியானந்தா எங்கே இருக்கிறார்? அவர் உருவாக்கியதாகக் கூறப்படும் கைலாசா நாடு எங்கே இருக்கிறது என்று தெரியாத நிலையில் - அவரின் பக்தர்கள் பலரும் தேடியவண்ணம் இருந்தனர். அந்த வேளையில்தான் அமெரிக்காவின் நியூஜெர்சி மாகாணத்தின் நெவார்க் நகரத்துடன் கைலாசா நாடு இரட்டை (சகோதர) நகர ஒப்பந்தம் செய்துகொண்டதாக கடந்த ஜனவரி 12ஆம் திகதி காணொலி - புகைப்பட ஆதாரத்துடன் செய்தி வெளியானது.

அந்தக் காணொலியின் நெவார்க் நகரத்தின் நகர மண்டபத்தில் அந்த நகரத்தின் பிரதிநிதிகளுடன் கைலாசா நாட்டின் பிரதிநிதிகள் கையெழுத்திடும் காட்சி இடம் பெற்றிருந்தது. இதன் மூலம் கைலாசா நாட்டை இறையாண்மை கொண்ட நாடாக அமெரிக்கா அங்கீகரித்துள்ளதாக நித்தியானந்தாவின் சீடர்கள் பெருமைப்பட்டுக் கொண்டனர்.

### ஐ.நா. கூட்டத்தில் கைலாசா

இந்நிலையில், சுவிற்சர்லாந்தின் ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின்

கூட்டத்தில் கடந்த பெப்ரவரி 22,24ஆம் திகதிகளில் நடந்த இரு கூட்டங்களில் நித்தியானந்தாவின் சீடர்கள் பங்கேற்றனர். இது தொடர்பான காணொலிகள் சமூக ஊடகங்களில் வெளியானதும் நித்தியானந்தா உண்மையிலேயே கைலாசா என்ற நாட்டை உருவாக்கி விட்டாரோ? கைலாசா என்பது உண்மைதானோ என்ற சந்தேகங்கள் எதிர்ப்பாளர்கள் மத்தியிலும் உருவாகின.

இந்தக் கூட்டத்தில் பேசிய விஜயபிரியா நித்தியானந்தா, "நான் ஐ.நா.வுக்கான நிரந்தரத் தூதர், கைலாசாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி, பங்கு கொள்கிறேன்உ இந்துக்களுக்கான முதல் இறையாண்மை நாடு ''யுனைடெட் ஸ்டேட்ஸ் ஒவ் கைலாசா'' இந்துக்களின் உயரிய தலைமகன் நித்தியானந்த பரமசிவத்தால் உருவாக்கப்பட்ட நாடு இது'' என்றவர். ''இந்து மதத்தின் பழைமையான பாரம்பர்யம், வாழ்வியல் முறைகளை மீட்டெடுப்பதற்காக நித்தியானந்தா பல துன்புறுத்தல்களை அனுபவித்து வருகிறார். அவர் போதனை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது. மேலும், பிறந்த நாட்டிலிருந்து அவர் நாடு கடத்தப்பட்டிருக்கிறார்'' என்றும் பதிவு செய்தார்.

இந்நிலையில் இது குறித்த உண்மைகளை ஐ.நா. வெளியிட்டது.

"ஐ.நா.வின் கிளை அமைப்புகள் நடத்தும் சில கூட்டங்களில் ஒரு தனிப்பட்ட நாட்டின் சார்பாக மட்டுமே கலந்துகொள்ள முடியும் என்ற எந்த விதியும் இல்லை தன்னார்வ அமைப்புகள், நிறுவனங்கள்கூட இவற்றில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்படுகிறது. அதைப் பயன்படுத்தித்தான் நித்தியானந்தாவின் சீடர்கள் இதில் பங்கேற்றனர்" என்று தெரிவித்தது. அத்துடன், இரு கூட்டங்களிலும் கைலாசா சார்பில் பங்கேற்றவர்கள் கூறிய கருத்துகள் சற்றும் பொருந்தாததாக அமைந்ததால் அவற்றை நிராகரித்து விட்டதாகவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் அலுவலகம் தெரிவித்தது.

இதன் மூலம் நித்தியானந்தா கூறியது போன்று கைலாசா நாட்டை தனிநாடாக ஐ.நா. அங்கீகரிக்கவில்லை என்பது நிரூபணமானது.

### 30 நகரங்களுடன் ஒப்பந்தம்

ஐ.நா. அங்கீகாரம் என்பது பொய் என்பது நிரூபணமான நிலையில் அடுத்த அதிர்ச்சி தகவல். அமெரிக்காவில் இருந்து வந்தது அதாவது நித்தியானந்தாவின் கற்பனை நாடான கைலாசாவுடன் நெவார்க் நகரம் மட்டுமல்ல 30இற்கும் மேற்பட்ட நகரங்கள் இரட்டை நகர ஒப்பந்தங்களில் ஒப்பமிட்டுள்ளன என்பதே அது.

இவ்வாறு கைலாசாவுடன் இரட்டை நகர ஒப்பந்தம் செய்து கொண்ட அமெரிக்காவின் நகரங்கள் மேற்கே பசுபிக் சமுத்திரம் முதல் கிழக்கே அத்திலாந்திக் சமுத்திரம் வரை விரவிக் கிடக்கின்றன. வடக்கு கரோலினா மாகாணத்தின் ஜாக்சன் வில்லே என்ற நகரமும் இவ்வாறு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளன. இந்த நிலையில், அந்த நகரம், "எங்கள் பிரகடனம் ஒன்றும், அங்கீகாரம் அல்ல ஒரு விண்ணப்பத்துக்கான பதில்தான் அது. அந்த விண்ணப்பத்திலிருந்த விவரங்களை நாங்கள் சரிபார்க்கவில்லை" என்று கூறியது. இந்த நிலையில் முதல் இரட்டை நகர ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட நெவார்க் நகரமும் பின்வாங்கியுள்ளது.

இந்த நிலையில், இந்தியாவால் தேடப்படும் நித்தியானந்தாவால் ஏமாற்றப்பட்டதை நெவார்க் நகரம் ஒப்புக் கொண்டுள்ளது. கைலாசா என்ற நாடு இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டதால் அந்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதாக நெவார்க் நகர மேயர் அறிவித்தார்.

### ஏமாந்தது எப்படி?

அமெரிக்காவின் 30 நகரங்களுடன் கைலாசா செய்து கொண்ட ஒப்பந்தங்கள் மூலம் நிதி ரீதியான பலன்கள் எதுவும் இல்லை என்றாலும் தனி நாடு என்று நித்தியானந்தா கூறும் கருத்துகளுக்கு வலு சேர்ப்பதாக அந்த ஒப்பந்தங்கள் அமைந்துவிட்டன. இந்த ஒப்பந்தங்கள் தாம் கூறியவை உண்மை என்பதை நிரூபிப்பதாக நித்தியானந்தா தரப்பு தெரிவித்தது.

கைலாசா என்பது கற்பனை தேசமே என்பது தெளிவாகிவிட்ட நிலையில் இந்தியாவில் தேடப்பட்டு வரும் பாலியல் வழக்குகளில் தேடப்பட்டு வரும் நபரான நித்தியானந்தாவின் மோசடி வலையில் அமெரிக்க நகரங்கள் விழுந்தது எப்படி என்ற கேள்வி அந்த நாட்டை உலுக்கி வருகின்றது. அமெரிக்காவின் முன்னணி ஊடகங்கள் பலவும் இது குறித்து விவாதித்து வருகின்றன.

### பிரான்ஸுக்கும் ஏமாற்றம்

அமெரிக்க நகரங்கள் மட்டுமின்றி பிரான்ஸ், கினி, சியாரோலினி போன்ற நாடுகளின் நகரங்களுடனும் இதுபோன்ற கலாச்சார ஒப்பந்தங்களை செய்துள்ளது இது குறித்த தகவல்கள் கைலாசாவின் ருவிற்றர் பக்கத்தில் பகிரப்பட்டுள்ளன. இதேநேரம் ஐ.நாவுக்கான கைலாசாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி என்று கூறப்படும் விஜயப்பிரியா கனடா, பங்களாதேஷ், சாம்பியா உள்ளிட்ட பல நாடுகளின் தூதுவர்களை

மரியாதை நிமித்தம் சந்திக்கும் புகைப்படங்களும் அந்த ருவிற்றர் பக்கத்தில் வெளியிடப்பட்டன.

கைலாசா தனிநாடுதான் என்ற தோற்றத்தைக் கொடுக்கும் அந்தப் பதிவுகள் அந்த ருவிற்றர் பக்கத்தில் நிரம்பியுள்ளன. நித்தியானந்தாவுக்கு பல சிறிய நாடுகளின் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவிப்பது போல தகவல் வெளியாகியுள்ளன. அதே பக்கத்தில் சீனாவின் ஜனாதிபதியாக மூன்றாவது முறையாக தெரிவாகியுள்ள ஸீ ஜின்பிங்குக்கு நித்தியானந்தா வாழ்த்துத் தெரிவிப்பதும் முக்கியமான விடயமாகப் பார்க்கப்படுகின்றது.

### கைலாசாவின் விளக்கம்

கைலாசா என்ற தேசம் என்பது இல்லவே இல்லை. எல்லை வரையறை இல்லாத கற்பனை தேசம் என்ற விமர்சனங்களுக்கு நித்தியானந்தா தரப்பு விளக்கம் அளித்துள்ளது.

பண்டைய அறிவார்ந்த இந்து நாகரிக தேசத்தின் மீட்டுருவாக்கமே கைலாசா தேசம். எல்லைகள் இல்லாத சேவை அடிப்படையிலான தேசம் இது என்றும் உலகம் முழுவதும் பல நாடுகளில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலமாக செயல்படுவதாகவும் நித்தியானந்தா தரப்பு கூறியுள்ளது.

சாதி, இனம், தேசம், நிறம், பாலினம் என்ற வேறுபாடு இல்லாமல் உலகின் அமைதிக்காக அனைவருக்கான வாழும் அறிவொளி என்பதையே இலக்காகக் கொண்டு இயங்கி வருவதாகவும் கூறுகிறார்கள்.

ஆனால் பொதுமக்கள் மத்தியில் நித்தியானந்தாவும் அவரின் சீடர்களும் அடிக்கும் இந்தக் கூத்துகள் ஒரு பொழுது போக்காகவே பார்க்கப்படுகின்றன என்பதே உண்மை.





SUBASH European Ltd
இலங்கை,
இந்திய உணவுப்
பொருட்கள்,
Malaysia இல்
இருந்து இறக்குமதி
செய்யப்பட்ட
துர்காஸ்
அகர்பத்திகள்...
THURGA'S PREMIUM SERIES
THURGA'S FLOWER SERIES
காற்றினில் புதுவாசம் துர்காஸ்
துர்காஸ் கலாச்சரத்தின் அடையாளம்
OLD BOX
vieille boite alte Schachtel
gammel kasse
New Box
nouvelle boite
neue Kiste Ny æske
FRANCE வர்த்தக பெரு மக்களுக்கு
ஓர் நற்செய்தி
SUBASH Brand WET TAMARIND
Subash European Ltd இறக்குமதி செய்யப்பட்ட
அனைத்து பொருட்களும் மொத்தமாக அள்ளி செல்ல விரைவில்
புதிய பிரமாண்டமான இடம் France இல் வர உள்ளது.
SUBASH Brand RED RAW RICE
SUBASH Brand MUTHU SAMBA RICE
SUBASH Brand MOTTAI KARUPPAN RICE
38, Rue Dunois Paris 75647 Cedex 13 France
Tel-06 52 82 73 03 | 066 96 67 571 | subasheuropeanltd016@hotmail.com

# கலைஞர் கருணாநிதிக்கு கடலில் பேனா சிலை அவசியமா?



தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் கருணாநிதி பயன்படுத்திய பேனாவின் சிலையை சுமார் 81 கோடி ரூபாய் செலவில் 134 அடி உயரத்தில் சென்னை மெரினா கடலுக்கு நடுவே அமைக்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

அவரின் இலக்கியப் பணி, எழுத்தாளுமையை போற்றும் விதமாக பேனா சிலையை அமைக்க இருப்பதாக தமிழக அரசு கூறுகிறது.

பேனா சிலை அமைப்பதற்கு ஆதரவை விட எதிர்ப்புத் தான் அதிகமாக உள்ளது என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

ஏனெனில், மெரினா கடலில் பேனா நினைவுச் சின்னம் அமைப்பது தொடர்பான கருத்து கேட்பு கூட்டம் சமீபத்தில் நடத்தப்பட்டது.

இந்தக் கருத்து கேட்பு கூட்டத்தில் பேசிய சீமான், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால், கடலில் நினைவுச் சின்னம் அமைப்பதை எதிர்ப்பதாக தெரிவித்தார். பள்ளிக் கூடங்களை சீரமைக்க காசு இல்லை என்பவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்க மட்டும் ஏது பணம் எனவும் பேனா சிலை அமைத்தால், அதை உடைப்பேன் எனவும் பேசினார்.

இதில் நாம் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம், பள்ளிக் கூடங்களைச் சீரமைக்க காசு இல்லை என திமுக அரசு கூறியதை சீமான் சுட்டிக்காட்டியதுதான்.

ஆம்! நிதி பற்றாக்குறையால் தமிழக அரசு தள்ளாடுவதாகவும், தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடும்பத்தின் மீதும் ரூ. 2,63,976 கடன் சுமை உள்ளது எனவும் நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் சமீபத்தில் கூறியிருந்தார்.

இப்படி இருக்கையில் எழுதாத பேனாவிற்கு 80 கோடி செலவா என மக்கள் பலரும் கேள்வி எழுப்புகின்றனர்.

மேலும் உலகின் இரண்டாவது நீளமான கடற்கரையான மெரினா சென்னையின் மிக நேர்த்தியான அடையாளமாகும். ஆனால் இங்கு அண்ணா, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, கருணாநிதி போன்றவர்களின் உடல்களை புதைத்து இயற்கை தந்த கொடையை சுடுகாடாக மாற்றிவிட்டனர் என்ற விமர்சனமும் தொடர்ந்து எழுவது உண்டு.

இப்படிப்பட்ட சூழலில் தான் பணத்தை கொட்டி மெரினா கடற்கரையின் இயற்கை அடையாளத்தை மாற்றி பேனா சின்னம் அமைப்பதற்கு சுற்றுசூழல் ஆர்வலர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அதன்படி, உயரமான ஒரு கட்டுமானம் எழுப்பப்பட்டால், அடுத்த 10 ஆண்டுகளில், மணல் குவிப்பால், கரையோர பகுதிகளுக்கும், கடல் வளத்துக்கும் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படும். சூழலியல் பாதிப்பு, மீனவர்களின் அச்சம் ஆகியவற்றை கருதி, இத்திட்டத்தை மாற்றி அமைக்க தமிழக அரசு முன் வர வேண்டும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.






# இன்னொரு புதுமை இவர்களை வெல்லும்



**இ செ துரை**
ஊடகவியலாளர்
டென்மார்க்



அமெரிக்கா தலைமையிலான உலக ஒழுங்கு 75 வருடங்களாக நடந்து முதுமையடைந்து விட்டது, அதை மாற்ற வேண்டும்.

ஒரு சிலருக்கு வாய்ப்பாகவும், பலருக்கு வாய்ப்பற்றதாகவும் இருக்கும். இன்றயை பொருளாதார உலக ஒழுங்கில் அவ்வப்போது மாற்றங்கள் செய்ய சீன, ரஸியா, இந்தியா போன்ற நாடுகள் முயற்சி செய்தன. ஆனால் 21ம் நூற்றாண்டிலும் அது கைகூடவில்லை.

எந்த இரண்டாம் உலக யுத்தம் இந்தப் பாரபட்சமான உலகத்தை உருவாக்கியதோ அதுபோன்ற இன்னொரு யுத்த வெற்றயால் தான் இதை மாற்ற முடியும் என்று கடைசியாக உணர்ந்த பின் இதை மாற்ற சீனாவும் ரஸியாவும் கடந்த மார்ச் 20-22ம் திகதிகளில் செய்து கொண்ட ஒப்பந்தங்களால் முடிவு செய்தன.

உலகத்தை மாற்ற அவர்கள் தேர்வு செய்ததுதான் உக்கேரன் போர். அந்தப் போருக்காக அவர்கள் சொன்ன அடிப்படைக் காரணங்கள் எல்லாமே பொய் என்பதை ரஸியாவும் சீனாவும் மிகத் தெளிவாக அறிவார்கள். இந்தப் போரின் அச்சாமி உலக ஒழுங்கை மாற்றுவதுதான்.

ரஸியாவும் சீனாவும் செய்த ஒப்பந்தத்தின் உயிர் நாடியே அதுதான். உலகின் முதலாவது எரிவாயு உற்பத்தி நாடு ரஸியா, உலகின் இரண்டாவது பெரிய ஆயில் உற்பத்தி நாடு ரஸியா. இனி ரஸியாவிடமிருந்து இவற்றை இறக்குமதி செய்யும் உலக நாடுகள் எலலாமே சீன நாணயமான யுவானில் கொடுப்பனவை செய்யலாம் என்று ரஸிய அதிபர் இணங்கி தனது நாட்டு ரூபிள் நாணயத்தையும் தூக்கி வீசி சீன தலைமையை ஏற்றுவிட்டார்.

பதிலுக்கு சீனா மேற்கு நாடுகள் ரஸியா மீது விதித்த அத்தனை தடைகளையும் முறியடிக்க வணங்கி ஆயிரக்கணக்கான படிவங்களில் யாராலுமே மாற்ற முடியாத ஒப்பந்தங்களை எழுதிவிட்டது. எப்படி சிறீலங்கா சீனாவின் கடன் பொறிக்குள் மாட்டி வங்குரோத்து நாடாகியதோ அதுபோன்ற ஒரு பொறிக்குள் ரஸியாவை சிக்குப்பட வைக்க வேண்டிய நிலை உருவாகிவிட்டது. இது அமெரிக்க தலைமையிலான உலக ஒழுங்கை விட ஆபத்தான உலக ஒழுங்கு என்பதை தூரப்பார்வையுடன் புற்றின் கண்டு பிடிக்கவில்லை.

அதற்கு மேற்கு நாடுகளும் ஒரு காரணமே அவரை சர்வதேச போர் குற்றவாளியாக்கி 143 நாடுகளில் எங்கு இறங்கினாலும் கைது செய்யக்கூடிய பிடியாணையை சர்வதேச போர் குற்ற நீதிமன்ற பிறப்பித்தது. இது சீனாவின் காலடியில் விசூவதைத் தவிர வேறு வழிகளற்ற அவல நிலையை புற்றினுக்கு உருவாக்கியது.

உக்கிரேன் போருக்கு பின் புவி வெப்பமாதலை தடுக்கும் வேலைகளை உலகம் கைவிட்டு விட்டது. புவியை வெப்பமாக்கும் எரிபொருள்களுக்காக போராட ஆரம்பித்துவிட்டது. இதனால் என்ன நடக்கும் துருவ பணி வேகமாக உருகும், வடதுருவத்தின் வழியே புதிய கடற்பாதை திறக்கும்.

சுயஸ்கால்வாயை உயிர்நாடியாக கொண்ட வர்த்தக கடற்பாதையை விட இது மலிவானது. ரஸியாவின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளே அதிகம். இதற்கான அனுமதியையும் சீனா பெற்றுவிட்டது.

இப்படி ரஸியாவிடமிருந்து எதையெல்லாம் பெற முடியுமோ அத்தனையையும் சீன அதிபர் ஒரு சதம் செலவில்லாமல் எழுதி வாங்கி விட்டார். இனி சீனா வேறு ரஸியா வேற்றல்ல தடையில்லா ஒப்பந்தம் முடிவாகிவிட்டது.

உக்கிரேனுக்காகன 12 அம்ச தீர்வுத் திட்டம் என்று பேசியபடி வந்த சீன அதிபர் உக்ரேன் என்ற ஒரு நாடு உலகத்தில் இருக்கிறதா? என்று

கேலியாக கேட்டபடி சென்று விட்டார்.

ஐரோப்பா வாங்கிய மலிவு விலை எரிவாயு இனி சீனாவிற்கு போகிறது 98 பில், கன மீட்டர் வருடாந்த ஏற்றுமதி, மேற்கு நாட்டு நிறுவனங்கள் வெளியேறிய இடங்களெல்லாம் இனி சீன நிறுவனங்கள் நிரவல் செய்யும் ரஸியாவின் மிகப் பெரிய கார் உற்பத்தியையே சீனா கைப்பற்றிவிட்டது.

கொங்கொங்கை தன்னோடு இணைத்ததை விட பெரிய இணைப்பு இது. இனி தைவானை மட்டும் சுதந்திரமாக சீனா இருக்க விடுமா? இக்கட்டுரை எழுதும்போது அமெரிக்க போர் கப்பலை சீனா விரட்டியியிருக்கிறது. தென் சீனக் கடலில் சீன உளவு பலூனை சுட்டதற்கு பதிலடி.

இனி ஏட்டிக்கு போட்டியாக விவகாரம் சூடேறப் போகிறது. உலகம் விரைவில் உக்கிரேனை மறக்குமளவிற்கு சீனா புதிய பிரச்சினையை கிளப்பப் போகிறது.

ஆனால் எல்லோர் முன்புமுள்ள கேள்வி சீனா, ரஸியா, இந்தியா, பிரேசில் போன்ற நாடுகளும் தலைமை தாங்கும் புதிய உலக ஒழுங்கு இன்றுள்ள வாழ்வை விட சிறந்த வாழ்வை உலக ஏழைகளுக்கு தருமா..?

நிச்சயமா இல்லை.

வல்லரசுகள் தலைமை தாங்கும் உலகம் என்பது அமெரிக்காவின் இடத்தில் சீனாவின் லேபலை மாற்றும் ஒருவேலைதான்.

நாடுகள், வல்லரசுகள் என்ற ஐ.நா. உருவாக்கிய கொள்கை இந்த நூற்றாண்டின் முடிவிற்குள் தோல்விக் கொள்கையாக மாறாது என்பதைஉறுதியாகக்கூற முடியாது.

இவர்களில் யாருமே இந்த உலகத்தை சிறப்பாக நிர்வகிக்கும் வழியை கண்டவர்கள் அல்ல. தாம் நிர்வகிப்பதே சரியெனக் கண்ட பழைய கொள்கை உடையவர்களே.

இன்னொரு புதுமை இவர்களை வெல்லும்.

# இலண்டன் தமிழ் நிலையம் பாடசாலை

## கலாச்சாரல் விழா



www.londontamilcentre.com

இலண்டன் தமிழ் நிலையப் பாடசாலை வளர்ச்சியை முன்னிட்டு வருகின்ற 15.04.2023 சனிக்கிழமையன்று வின்சன் சேர்ச்சில் மண்டபத்தில் **கலைச்சாரல்** எனும் விழா முன்னெடுக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரும் இநநிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென்பதே அனைவரது விருப்பமாகும்.

1989 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பாடசாலையின் முப்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் விதமாக ஆயத்தங்கள் செய்யப்பட்டிருந்த வேளை, கொரோனா எனும் கொடிய நோயின் தாக்கம் உலகையே புரட்டிப் போட்டது. அதனால் இடை நிறுத்தப்பட்ட அந்நிகழ்வு தற்போது **கலைச்சாரல்** எனும் பெயரில் நடைபெற இருக்கின்றது.

இந்நிகழ்வில் நுண்கலை சார்ந்த பல்சுலை நிகழ்ச்சிகளுடன் கவிதா நிகழ்வொன்றும் இடம்பெறுகின்றது. நல்லதொரு மாலை நிகழ்வாக அமையும் இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்காகப் பலரும் முனைப்புக் காட்டி வருகின்றனர். கடந்த முப்பத்து மூன்று வருடங்களாக எத்தனையோ மாணவர்களை இப்பாடசாலை உருவாக்கித் தந்திருக்கின்றது. தனித்துவமிக்க இப்பாடசாலையில் கற்ற மாணவர்கள் நாட்டின் எப்பாகத்தில் வாழ்ந்தாலும் அன்று வந்து தங்களது பழைய நண்பர்களை ஆசிரியர்களைச் சந்தித்து உரையாடலாம்.

பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் நிதிப்பங்களிப்புச் செய்ய விரும்புவோர் தங்களால் முடிந்தளவு பண உதவியைச் செய்யலாம். அதற்காக வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. (https://wonderful.org/fundraisers/7A9P7) அத்துடன் விழாவிற்கான நுழைவுச் சீட்டினையும் வாங்கி அவர்களை ஊக்குவிக்கலாம். எங்களது அடுத்த சந்ததிக்கு எமது தமிழ் மொழியைப் பண்பாட்டைக் கையளிக்க வேண்டுமெனில் இப்பாடசாலையைப் பேணி அவர்களிடம் ஒப்படைப்பது எங்கள் அனைவரது கடமையாகும்.

**- வைத்தியகலாநிதி வி. அனந்தசயனன்**



# தமிழ் புத்தாண்டும் தமிழ் சினிமாவும்!

## ஒரு சுவாரஸ்ய பார்வை

உலகத் தமிழர்களால் ஏப்ரல் 14 ஆம் தேதி புத்தாண்டு தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

சித்திரை முதல் நாளன்று பெருவாரியாக மக்கள் கோவில்களுக்கு சென்றும், வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டும் தமிழ் வருடப்பிறப்பை சிறப்பாக கொண்டாடுகின்றனர்.

தமிழ் புத்தாண்டை மற்றொரு வகையாகவும் தமிழ் மக்கள் கொண்டாடுவார்கள். அதுதான் சினிமா!

தமிழ் சினிமாவிற்கும், தமிழ் புத்தாண்டிற்கும் நீண்ட கால தொடர்பு உண்டு என கூறினால் அது மிகையாகாது!

ஆம் ஒவ்வொரு ஆண்டும் தமிழ் புத்தாண்டில் பல முன்னணி நடிகர்கள், இயக்குனர்களின் புதிய திரைப்படங்கள் வெளியாகும் இதை ரசிகர்கள் திரையரங்கிற்கு சென்று கொண்டாடி மகிழ்வர்.

அதிலும் சில தமிழ் புத்தாண்டு தினத்தில் தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரங்களின் திரைப்படங்கள் ஒன்றாக ரிலீஸாகி ரசிகர்களுக்கு விருந்து படைத்த வரலாறுகள் உண்டு.

அதில் சுவாரஸ்யமானவைகள் சிலவற்றை காண்போம்

### 1994

1994 ஆம் ஆண்டு தமிழ் புத்தாண்டு தினத்தில் மொத்தம் 8 திரைப்படங்கள் வெளியானது.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் வீரா, கேப்டன் விஜயகாந்த் நடிப்பில் ஹானஸ்ட்ராஜ், பிரபுதேவா நடிப்பில் இந்து போன்ற முன்னணி நட்சத்திரங்களின் படங்கள் மோதி கொண்டன.

### 2005

தமிழ் சினிமா ரசிகர்கள் மறக்கவே முடியாத தமிழ் புத்தாண்டாக 2005 புத்தாண்டு அமைந்தது. ஏனெனில் தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரங்களான ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜய் படங்கள் மோதிக் கொண்டன. அதன்படி சந்திரமுகி, மும்பை எக்ஸ்பிரஸ், சச்சின், பிரியசகி போன்ற படங்கள் வெளியாகி திரையரங்குகள் திருவிழா போல காட்சியளித்தன.

இந்த ஆண்டு (2023) தமிழ் புத்தாண்டுக்கு வெளிவரும் தங்கள் ஆதர்ஷ நாயகர்களின் திரைப்படங்களை காண ரசிகர்கள் ஆவலோடு காத்திருக்கிறார்கள்.






# சரவண பவன்

‘சரவண பவன்’! உலக தமிழர்கள் அனைவரும் அறிந்த புகழ்பெற்ற உணவகம் ஆகும். உலகளவில் மிகவும் பிரபலமாக உள்ள உணவக சங்கிலிகளின் ஒன்றாகவும் உள்ளது.

சரவண பவனின் நிறுவனர் பெயர் பி. இராஜகோபால்.

தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் ஏழைக் குடும்பம் ஒன்றில் ஆகஸ்ட் 5, 1947 ஆம் ஆண்டில் பிறந்தார் இராஜகோபால்.

வறுமை காரணமாக 7ஆம் வகுப்பிலேயே படிப்பைப் பாதியில் நிறுத்தி விட்டு ஓர் உணவகத்தில் மேஜை துடைக்கும் வேலையைச் செய்யத் தொடங்கினார்.

அப்போதெல்லாம் இரவில் கட்டாந்தரையில் படுத்து உறங்கியவர்தான். அங்கிருக்கும் போது தான் தேநீர் போடக் கற்றுக் கொண்டதாக இராஜகோபால் கூறியதுண்டு. தொடர்ந்து ஒரு மளிகைக் கடையில் உதவியாளராகப் பணியில் சேர்ந்தார்.

அங்கே கிடைத்த அனுபவங்களைக் கொண்டு தன் அப்பா மற்றும் மைத்துனரின் உதவியுடன் சொந்தமாகத் தனியாக ஒரு மளிகைக் கடையைத் துவக்கினார்.

முதல் முயற்சி என்பதால் பெரும் சவாலாகத்தான் இருந்திருக்கிறது.

அத்தனையையும் தனது தன்னம்பிக்கையால் மட்டுமே வெற்றிகரமாக எதிர்கொண்டார் இராஜகோபால்.

மளிகைக் கடையில் 1979 ஆம் ஆண்டில் ஒரு நாள் தனது விற்பனையாளர்கள் ஒருவருடன் நடந்த உரையாடலின் விளைவாக இராஜகோபால் தொடங்கிய உணவகம்தான் இன்று உலகம் முழுக்க 33 கிளைகளுடன், வெளிநாடுகளில் 45க்கும் மேற்பட்ட கிளைகளுடன் நிமிர்ந்து நிற்கும் சரவண பவன் எனும் ருசிகரமான ஆலவிருட்சம்.

1981 ஆம் ஆண்டில் சரவண பவன் உணவகம் தொடங்கப்பட்டது. சரவண பவனின் வெற்றியின் ரகசியம்



சுவையான மற்றும் தரமான உணவுகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதுதான்.

இன்று சரவண பவன் நிறுவனத்தின் மொத்த மதிப்பு பல கோடிகளுக்கு மேல் உள்ளது.

இந்தியா மட்டுமின்றி, இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, சவுதி அரேபியா, தாய்லாந்து, ஸ்வீடன், ஜெர்மனி போன்ற பல நாடுகளில் சரவண பவன் கிளைகள் பரந்து விரிந்து கிடக்கின்றன.

இவ்வளவு பெரிய உணவு சாம்ராஜ்யத்தை அமைத்த இராஜகோபால் 18 ஜூலை 2019 ஆம் ஆண்டு தனது 71வது வயதில் இறைபதம் அடைந்தார்.



# உல்லாசபுரியில் காதலியுடன் புடின் உல்லாசம்!



பாலா

‘‘ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்’’ என்னும் கிராமப்புற பழமொழி ஞாபகம் வருகிறது.

ரஷ்ய ஜனாதிபதி புடினின் இன்றைய வாழ்க்கைக்காக இதை அப்போதே திருவாய் மலர்ந்தருளிய நமது பரம்பரையினரருக்கு நன்றி.

அண்டை நாடான உக்ரைன் மக்களைக் கொன்று நாட்டைச் சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கும் புடின் தமது நாட்டின் ஆற்றோரமுள்ள ஆடம்பர மாளிகையில் தமது காதலியுடன் சரச சல்லாப வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்.

இந்தச் சல்லாபத்தை நான் பார்க்கவில்லை. உலகப் பத்திரிகை ஒன்று மோப்பம் பிடித்து பகிரங்கப்படுத்தி உள்ளது.

புடினுக்கு 70 வயது. முதல் மனைவியை விவாகரத்துச் செய்தவர். இரண்டாவதாக ஒலிம்பிக்ஸ் உடற்பயிற்சி விளையாட்டுப் போட்டி ஒன்றில் தங்கப் பதக்கம் பெற்ற 39 வயதான பெண்ணைக் காதலியாக வைத்திருக்கிறார். இவருக்கு மூன்று குழந்தைகள்.

மாளிகையில் புடினும் அவரது காதலியும் தங்கும் அறை தங்கத்திலான இலைகளினால் அலங்கரிக்கப்பட்டுள்ளதாம்.

100 கோடி பவுண்ஸ் அசையாச் சொத்துக்கள் கொண்ட சாம்ராஜ்யம் ஒன்றை காதலிக்கும், உறவினர்க்கும் ஆடம்பரமான பல வீடுகளைக் கொடுத்திருப்பதாகவும் தகவல் கூறுகிறது. பிரமாண்டமான தொடர் மாடிக் கட்டடம் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளதாம்.

ர்யர்கள் புட்டினின் காதலியை முடிசூட்டப்படாத ர்ய மகாராணி” என பட்டப் பெயரிட்டு அழைக்கிறார்களாம்.

சொந்த மனைவி இருக்கும் போதே அல்னாகபேவாவுடன் உறவாக இருந்ததாகவும், 2014ம் ஆண்டில் மனைவியை விவாகரத்துச் செய்துள்ளார் எனவும் தெரிய வந்துள்ளது.

இவர் பெரிய பணக்காரர். வொட்கா என்னும் மதுபான விற்பனையில் 400 மிலியன் பவுண்ஸ் கிடைப்பதாகவும், ர்யாவின் பிரபல்யமான தொலைக்காட்சிச் சேவையில் மிகப் பெரிய பங்காளியாக இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

எல்லாம் சரிதான். ஆனால் உக்ரெயினில் புடின் நடத்தும் யுத்தத்தைப் பார்க்கும்போது “ரோமாபுரி பற்றி எரியும் போது நீரோ மன்னன் வீணை மீட்டுக் கொண்டிருந்தானாம்’’ கதை நெஞ்சை உறுத்துகிறது.

## தொல்லியல் திணைக்களம் மீது சுமந்திரன் கண்டனம்
## சிங்கள மேலாதிக்கத்தை திணிக்கும் திணைக்களம்



பயங்கரவாத சட்டத்தின் கீழ் கூட பிணையுள்ளது. ஆனால் தொல்லியல் சார்ந்த சின்னங்களுக்கு எதிராகச் செயற்பாட்டால் அதற்குப் பிணை இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் எம். சுமந்திரன் ஊடகவியலாளர்கள் சந்திபென்றில் தெரிவித்துள்ளார்.

ஆனால் இது ஒரு விசேட சட்டம். நாட்டிலே உள்ள எல்லாச் சட்டங்களிலும் பார்க்க இந்தச் சட்டத்தில் மட்டும் தான் பிணையே வழங்க முடியாது. அப்படி இது ஒரு விசேட சட்டம்.

நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால் அந்த அளவிற்கு விசேடமான அதிகாரங்களை தொல்லியல் திணைக்களம் கொண்டுள்ளது. அதன் காரணமாக நீதிமன்றங்களையும் அதை மீறிச் செய்ய முடியாதவாறு இந்தத் திணைக்களம் முடக்கி வைத்திருக்கிறது.

உண்மையில் இது தொல்லியல் திணைக்களம் அல்ல. இது சிங்கள மேலாதிக்கத்தைத் திணிப்பதற்காக உருவாக்கப்பட்ட திணைக்களமாகும். நாங்கள் இதுவரை காலமும் எடுத்த முயற்சிகள் பலனளிக்காமல் போனதற்கான காரணமும் இதுவாகும்.

# பழைய சோறு என்னும் தேவாமிர்தம்!

## அவசியம் தெரிந்து கொள்ளுங்கள்...

பழைய சோறு, பழஞ்சோறு, ஐஸ் பிரியாணி என பல பெயர்களால் அழைக்கப்படும் பழைய சாதம் முந்தைய நாள் வடித்த சோற்றில் தண்ணீர் ஊற்றி மறுநாள் உண்ணும் உணவாகும்.

அறுபது வயதைக் கடந்த பிறகும், நல்ல உடல் வலிமையோடு நோய் நொடிகள் இன்றி ஆரோக்கியமாக இருக்கும் கிராமத்துப் பெரியவர் யாரிடமாவது கேட்டுப் பாருங்கள்... 'உங்கள் ஆரோக்கியத்துக்குக் காரணம் என்ன? என்று, உடனடியாக 'பழைய சோறு' என்று பதில் வரும்.

பழைய சாதம் நம் முன்னோர்களின் உடல்நலத்துக்குப் பக்கபலமாக இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

அமெரிக்கன் நியூட்ரிஷன் சங்கம் பழைய சோற்றின் பெருமைகளையும் பலன்களையும் சில ஆண்டுகளுக்கு முன்னர் பட்டியலிட்டிருந்தது.



மிஞ்சிய சாதத்தில் தண்ணீர் ஊற்றி சாப்பிடுவதா என்று முகம் சுழிப்போர், பழைய சோற்றின் மகத்துவத்தை அறிய வேண்டும்.

பழைய சோறு சாப்பிடுபவர்களுக்கு, அம்மை போன்ற தொற்று நோய்கள் வராது.

காலையில் இதைச் சாப்பிடுவதால், வயிறு தொடர்பான நோய்கள் குணமாகும். உடலில் அதிகமாக இருக்கும் உடல் உஷ்ணத்தைப் போக்கும்.

பழைய சோற்றில் லட்சக்கணக்கான நல்ல பாக்டீரியாக்கள் உள்ளதால், அவற்றை உட்கொள்வதன் மூலம் செரிமான பிரச்சனைகள் நீங்கி, செரிமான மண்டலம் ஆரோக்கியமாக இருக்கும்.

முதுமை தோற்றத்தை தள்ளி போடும் ஆற்றல் பழைய சாதத்திற்கு உள்ளது. நீண்ட நாட்கள் இளமையுடன் காட்சியளிக்க விரும்பினால், பழைய சோற்றினை காலை உணவாக உட்கொள்ளலாம்.



இளம் வயதிலேயே எலும்பு சம்மந்தப்பட்ட பிரச்சனையால் இன்றைய காலக்கட்டத்தில் பலரும் பாதிக்கப்படுகின்றனர்.

பழைய சோற்றினை சாப்பிடுவதால் எலும்பு சம்மந்தமான சிக்கலில் இருந்து தப்பலாம்.

பழையதுடன் இரண்டு சிறிய வெங்காயம் வைத்து உண்டால் வெங்காயத்தின் தன்மை ரத்தத்தில் உள்ள கொழுப்பை கரைத்து, மாரடைப்பை தடுக்கிறது.

பனை மரங்கள் அபிவிருத்தி அடைந்த வல்லரசு நாடுகளிலே செழித்து வளரக் கூடியனவாக இருந்திருந்தால் பனம்பழங்கள் ஒவ்வொன்றும் ஈய உறைகளிலே சுற்றப்பட்டு அதன்மேல் ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டு பாரிய விளம்பரங்களுடன் இங்கு இறக்குமதியாகி வந்திருக்கும்.

இலகுவில் ஏமாறக்கூடிய மனம்படைத்த நாமும் பணத்தை வாரி இறைத்து அவற்றை வாங்கி உண்டிருப்போம். இதே பனைமரங்கள் அமெரிக்கா தேசத்திலே வளருபவையாக இருந்திருநத்தால் பனங்கிழங்குகளின் மருத்துவக் குணங்களை உலகறிந்திருக்கும்.

கருப்பட்டிகள் அருமருந்தாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும். நுங்குகளின் மகத்துவம் பேசப்பட்டிருக்கும் ஒடியல், புழுக்கொடியல், மாவகைகள் உலக சந்தையிலே பெரும் இடத்தைப் பிடித்திருக்கும். பனையின் ஒவ்வொரு பகுதிகளும் உலகின் உபயோகத்திற்கு வந்திருக்கும்.

ஆனால் பாவம் இந்தப் பனைமரங்கள் பாவப்பட்ட எம்மக்கள் மத்தியிலே தோன்றி பொலிவிழந்து காணப்படுகிறது.

பானங்களிலே அதிகூடிய புரதச் செறிவுடைய பானம் நுங்கு என்பது நம்மில் பலருக்கு தெரியாது. பால் தான் புரதச் செறிவுடைய பானம் என்று நினைத்துக் கொள்கிறோம். 100கி பாலிலே 3.3கி புரதம் இருக்கிறது. ஆனால் 100கி நுங்கிலே 10.8கி புரதம் இருக்கிறது. பாலினைப்போல் 3 மடங்கு புரதச் செறிவுற்ற பானம் நுங்கு என்பதை மனதில் நிறுத்துவோம்.

நுங்கினுடைய உலர்நிறையிலே 60 சதவீதமும் புரதமும் 30 சதவீதம் மாப்பொருளும் இருப்பதுடன் மிகக்குறைந்தளவு கொழுப்பே இதனில் காணப்படுகிறது. பனங்கூடல்களுக்குள் வசிக்கும் எமது சிறார்கள் புரதக் குறைபாட்டினால் அவதியுறுகின்றனர். ஆனால் அவர்களுக்க இந்த நுங்கின் மகத்துவம் சொல்லிக் கொடுக்கப் படுவதில்லை.

# ஆரோக்கிய வாழ்விற்கு பனை வளம் தரும் புரதமும் விற்றமினும்



**டாக்டர் சி. சிவன்சுதன்**
பொது வைத்திய நிபுணர்




எம்மத்தியிலே ஒரு கோடிக்கும் அதிகமான பனைகள் இருந்தும் இவற்றில் இருந்து கிடைக்கும் பனம்பழங்களில் 5 வீதமான பனம்பழங்கள் கூட உபயோகப்படுத்தப்படுவதில்லை. வண்டுகளிடமிருந்தும் புழுக்களிடமிருந்தும் அவற்றை முற்றாகக் காப்பாற்றி அனைத்துப் பழங்களையும் முழுமையாகப் பயன்படுத்துவது எப்படி என்பது சம்பந்தமான வழிமுறைகளை நாம் ஆராயவில்லை.

புரதச்சத்தது நிறைந்த விற்றமின்கள், கனியுப்புக்கள் நிறைந்த எமது அரும் சொத்தான பனம்பழங்கள் வீணடிக்கப்பட்டு மண்ணுக்கு உரமாகிக் கொண்டிருக்கின்றன.

பனம்பழங்களின் உலர்நிலையில் 11வீதம் புரதமும் பெருமளவு பீட்டா கரோட்டினும் ஏனைய விற்றமின்களும் இரும்பு, கல்சியம் போன்ற கனியுப்புக்களும் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்தப் பனம்பழங்களை மக்கள் விரும்பி உண்ணக்கூடிய வகையில் எவ்வாறு மாற்றங்கள் செய்வது என்பது சம்பந்தமான பல ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். சோடாவுக்கு மாற்றீடாக பனம் பழங்களிலிருந்து பலவகையான சுவையான பானங்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும். இடியப்பத்தினுள்ளும் பிட்டினுள்ளும் பனங்களி சேர்த்து சமைப்பதன் மூலம் அவற்றின் சுவையும் நிறமும் ஊட்டச்சத்தும் மெருகு பெறும் என்பது சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். பனங்களிகளை இலகுவில் பிரித்தெடுப்பது பாதுகாக்கும் பொறிமுறைகள் கண்டறியப்பட வேண்டும்.

பனம்பழங்களின் மருத்துவக் குணங்களும் அதிலே காணப்படும் நோய் எதிர்ப்புத்தன்மையும்



விஞ்ஞானபூர்வ ஆராய்ச்சிக்ள் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும். இந்த முயற்சி வெற்றி அளிப்பின் நாம் பனம்பழங்களை ஈய உறைகளில் சுற்றி அவற்றில் ஸ்ரிக்கரும் ஒட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையும் ஏற்படலாம்.

பலவிதமான விளம்பர யுத்திகளுடன் இறக்குமதியாகி அதிக விலையில் மாறும் நிலை காணப்படுகிறது. ஆனால் எமது சொந்த மண்ணில் விளையும் ஒட்ஸிலும் சிற்நத அதிக நார்த்தன்மை கொண்ட மலிவான இயற்கையான பனங்கிழங்குகளை நாம் புறக்கணித்து விடுகின்றோம். பனங்கிழங்குகள் அதிகளவு நார்த்தன் மையும் மிகக்குறைந்தளவு கொழுப்பும் கொண்டிருப்பதுடன் உலர்நிலையில் 12 வீத புரதத்தையும் பல விற்ற மின்கள் கனியுப்புக்களையும் கொண்டிருக்கின்றன.

பனங்கிழங்குகளில் இருக்கும் மாப்பெருளானது குறைந்த வேகத்திலே உடலினுள் அகத்துறிஞ்சப்படுவதால் இது நீரிழிவு நிலை உள்ளவர்களுக்கம் ஒரு சிற்நத உணவாக காணப்படுகின்றது. பனம்பழங்களின் பயன்கள் அனைத்தையும் எடுத்த பின்பு அதன் கொட்டைகளை பனம்பாத்தி போடுவதன் மூலம் பனங்கிழங்குகளை பெற்றுக்கொள்ள முடியும். இதன் மூலம் பனம்பழங்களும் பனம் விதைகளும் பயனுடையவையாக மாற்றம் பெறும் அத்துடன் பனங்கிழங்குகளை பதப்படுத்தி பனங்கிழங்குகளாகவே பாதுகாக்கும் பொறிமுறை கண்டறியப்பட வேண்டும்.




# திருமண மேடை

புலம் பெயர் தமிழர்கள் மத்தியில் நடைபெறும் திருமண நிகழ்வுகள் சம்பந்தமான படங்களையும் விபரங்களையும் வெளியிட...

## சீமைக் குரலும் திருமணங்களும்

தீர்மானித்திருக்கும் நற்செய்தியை வாசகர்களுக்கும், நேயர்களுக்கும் அறியத் தருகிறோம்.

வண்ணப் படங்களாகவும், மணமக்களின் பெயர் விபரங்களுடனும், இனபந்துக்கள் கூடி நிற்கும் படங்களுடனும், மணவறை வைபவப் படங்களுடனும் பிரசுரித்துச் சிறப்பித்துத் தரப்படும் என்பதை தெரியத் தருகிறோம்.

**விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்**

**தொலைபேசி:**

**0208 900 1091 , 07710 646359**




# சமையல் கலையும் ருசி பாகமும்

கல்யாணி





நமது முன்னோர்கள் வீடுகளில் தினமும் சமையல் செய்வதை ஒரு கலையாகவே கருதினர். அன்றிலிருந்து இன்றுவரை ''சமையல் கலை'' எம்முடன் வளர்ந்து வந்திருக்கிறது.

வாய்க்கு ருசியாகவும், பசிக்கு உணவாகவும், ஆரோக்கிய வாழ்விற்கு ஆதரவாகவும் மக்கள் வாழ்வதற்கு சமையல் கலை துணை நிற்பதையும் காண்கிறோம்.

இக்கலையின் வளர்ச்சிக்கு நமது வீடுகளில் உள்ள சமையல் அறைகள் உதவுகின்றன. அங்கெல்லாம் உப்பு, புளி, மிளகாய்த்தூள், வெந்தயம், மிளகு, சீரகம், பூண்டு, இஞ்சி உட்பட இன்னும் பல சமையலுக்கு வேண்டியவைகள் இருக்கும்.

ஒவ்வொரு காய்க்கும் வெவ்வேறான பாகமுறை இருக்கும். அதற்கேற்றவாறு சமையல் செய்தாக வேண்டும். இவை எல்லாம் பெண்களுக்கு கை வந்த கலை எனலாம்.

இன்று காலம் மாறிப் போச்சு. சமையல் கலையில் பெண்களுக்கிருந்த பெருமையில் ஆண்களும் பங்காளிகளாகி இருப்பதைக் காணலாம். மற்றொரு சமயத்தில் ஆண்களுக்குள்ள சமையல் கலைத் திறன் பற்றி பகிரலாம்.

இப்போது இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் குறிப்புகள் உங்கள் சமையல் கலைக்கு ருசி கூட்டினால் மகிழ்ச்சியாக இருக்கும்.



- குழம்பில் உப்பு அதிகமாகிவிட்டால் தக்காளிப் பழம் அல்லது உருளைக் கிழங்கை வெட்டிப் போட்டால் உப்புக் காரம் எடுபட்டுவிடும்.
- பாயாசத்திற்கு முந்திரிகை வத்தலுக்குப் பதிலாக பேரீச்சம்பழத்தை சிறிய துண்டுகளாக வெட்டி நெய்யில் வறுத்துப் போட்டால் மிக ருசியாக இருக்கும்.
- தோசை மாவுடன் சிறு அளவு சீரகத்தை கையில் எடுத்துக் கசக்கிப் போட்டால் சுவையும், மணமும் தரும்.
- பாகற்காயை சிறு துண்டுகளாக்கி உப்பு, மஞ்சள் தூள், வெல்லம், எலுமிச்சம் பழச்சாற்றில் அரை மணிநேரம் போட்டு வைத்தால் கசப்பிருக்காது.
- உருளைக்கிழங்கை தோலோடு வேக வைக்கும்போது அவை வெடிக்காமல் இருக்கவும். பதத்துடன் இருக்கவும் சிறு அளவு உப்பைச் சேர்க்கவும்.
- சாம்பார் செய்யும்போது அத்துடன் ஒரு நெல்லிக்காயைச் சேர்த்தால் சுவையும், மணமும் இருக்கும்.
- வடைக்கு உழுந்தரைக்கும்போது சிறு அளவு கொத்தமல்லிக் கீரையையும் சேர்த்து அரைத்தால் வாசனையாக இருக்கும்.
- இட்லி தயரிப்பதற்காக அரைக்கும் மாவில் இரண்டு தேக்கரண்டி நல்லெண்ணெயைக் கலந்துவிட்டால் தோசை மெதுவாகிவிடும்.
- முதல் நாள் வாங்கிய கீரையை மறுநாள் சமையல் செய்வதானால் கீரையின் அடிப்பாகத்தை தண்ணீரில் வைத்தால் வாடாமல் இருக்கும்.

# இலங்கையைக் காப்பாற்றிய மூன்று பெண்கள்

இலங்கையை வங்குரோத்து நிலையிலிருந்து காப்பாற்றியவர்கள் மூன்று பெண்கள் எனவும் அவர்களுக்கு இலங்கை மக்கள் சார்பில் நன்றி தெரிவிப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

துரதிஷ்டமான ஒரு காலகட்டத்தில் இலங்கை தத்தளித்துக் கொண்டிருந்ததாகவும், மக்கள் துன்பங்களின் மத்தியில் வாழ்ந்ததாகவும் இச்சமயத்தில் இந்த மூவரும் எமக்கு உதவியது பாராட்டுக்குரியதாகும் எனவும் மேலும் கூறினார்.

கொழும்பில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டம் ஒன்றில் பேசும் போது திரு. விக்கிரமசிங்க அம் மூவருடைய பெயர்களையும் பகிரங்கமாகத் தெரிவித்தார்.



முதலாவதாக - இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பெயரைக் குறிப்பிட்ட ஜனாதிபதி சென்ற எப்ரல் மாதத்தில் இலங்கை வங்குரோத்து நிலையை எதிர் நோக்கிய சமயத்தில் அமெரிக்காவிடமிருந்து மூன்று பில்லியன் பெற்றுக் கொடுக்க உதவினார்.

பிரதமருடனும்ஷ மந்திரிசபை



அங்கத்தவர்களுடனும் இவர் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இந்த அமெரிக்க உதவி கிடைத்தது. உரிய நேரத்தில் உதவி கிடைக்காமல் போயிருந்தால் நாட்டு நிலைமை மோசமாகியிருக்கும்.

தொடர்ந்துஅமெரிக்காவிடமிருந்து நிதி உதவியைப் பெறுவதற்கான முயற்சிகளை அமைச்சர் ஜனற் யெலன் அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுக்களும் உதவின. அடுத்து சர்வதேச நாணய நிதியத்தின் மனேஜிங் டைரக்டர் கிறிஸ்ரலினா ஜோஜிவா உலக வங்கியிடமும், இதர சம்பந்தப்பட்டவர்களுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளும் இலங்கைக்கு சாதகமாக இருந்ததாகவும் திரு. விக்கிரமசிங்க தெரிவித்தார்.



# மலேசியாவில் 500000 வேலை வாய்ப்பு

மலேசியாவில் தொழிலாளர்கள் பற்றாக் குறையாக இருப்பதனால் உடனடியாக 5 இலட்சம் தொழிலாளர்களை வெளிநாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்போவதாக மலேசிய மனிதவள அமைச்சர் திரு. வி சிவகுமார் தெரிவித்துள்ளார்.

பொருளாதார வீழ்ச்சி ஏற்படாமல் தவிற்பதற்காக இப்படியான நடவடிக்கையைத் தாமதமின்றி மேற்கொள்ள வேண்டியிருப்பதாகவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

தோட்டத் தொழில், வேளாண்மை, கட்டட நிர்மாண வேலை போன்றவற்றில் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாகவும் இதனால் பொருளாதாரம் பாதிப்படைய முன்னர் சீரமைக்க வேண்டி இருப்பதாகவும் தெரிவித்த அமைச்சர் சிவகுமார் மேலும் இதற்கான காரணங்களையும் கூறினார்.

மலேசியாவில் இவ்வேலைகளைச் செய்துவந்த வெளிநாட்டவர்கள் கொரோனா நோய் பரவிய காலத்தில் தமது ஊர்களுக்குச் சென்று விட்டார்கள். இதனாலும் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. இதைச் சீரமைக்காமல் விட்டால் நாட்டின் பொருளாதாரம் சீரழிந்துவிடும்.

இந்த நிலைமையைச் சமாளிப்பதற்காக 12 ஆசிய நாடுகளில் இருந்து தொழிலாளர்களை வேலைக்கமர்த்த உள்ளோம் என்றார்.

# டிரம்புக்கு சிம்ம சொப்பனமாக உருவெடுத்த இந்திய வம்சாவளியரான விவேக் ராமசாமி



அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் ஜுரூர், அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் போட்டியில் டிரம்புக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கும் இந்திய வம்சாவளியரான விவேக் ராமசாமி யார் அவர்?

டொனால்டு டிரம்ப் சார்ந்திக்கும் குடியரசு கட்சியை சேர்ந்த இந்திய வம்சாவளி நபரான விவேக் ராமசாமி தானும் 2024 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாக அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளது உலக அரசியல் அரங்கில் அதிகம் பேசப்படும் விடயமாக மாறியுள்ளது.

இதன் மூலம் டிரம்பிற்கு சிம்மசொப்பனமாக விவேக் ராமசாமி மாறியுள்ளார் என்றே சொல்ல வேண்டும்.

யார் இந்த விவேக் ராமசாமி?

விவேக் ராமசாமி பெற்றோர் இந்தியாவின் கேரள மாநிலம் பாலக்காட்டுக்கு அருகிலுள்ள வடக்கன்சேரியைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள்.

கேரளாவில் இன்ஜினீயரிங் படிப்பை முடித்த விவேக்கின் தந்தை வி.ஜி. ராமசாமி பணி நிமித்தமாக அமெரிக்காவுக்கு இடம் பெயர்ந்தார்.



அங்கு ஒகியோ (Ohio) மாகாணத்தின் சின்சினாட்டியில் விவேக் ராமசாமி பிறந்து வளர்ந்தார்.

சின்சினாட்டியின் செயின்ட் சேவியர் உயர்நிலைப் பள்ளியில் ராமசாமி 2003ம் ஆண்டில் டிப்ளோமா பெற்றார். கல்லூரியில் சிறந்த மாணவராகவும், வகுப்பில் முதல் மாணவராகவும் விளங்கிய அவர், தேசிய அளவில் ஜூனியர் டென்னிஸ் வீரராகவும், உயர்நிலைப் பள்ளியில் திறமையான பியானோ கலைஞராகவும் இருந்தார்.

37 வயதான இரண்டாம் தலைமுறை இந்திய அமெரிக்கரான விவேக் ராமசாமி, 2014 ஆம் ஆண்டு ரோவியண்ட் சயின்ஸஸ் என்ற



மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தை ஏற்படுத்தினார்.

பல நோய் வகைகளில் வெற்றிகரமான மருத்துவ பரிசோதனைகளுக்குப் பிறகு பல மருந்துகளை குனுளு அங்கீகரித்தது. அமெரிக்காவின் சிறந்த தொழில் முனைவேராக பிரபலமடைந்த இவர் மருத்துவ துறையில் தனது சிறந்த பணிக்காக மிகவும் பிரபலமடைந்தார்.

2015-ம் ஆண்டு விவேக் ராமசாமியின் மருந்து மேம்பாட்டுப் பங்களிப்பு பற்றி புகழ்பெற்ற ஃபோர்ப்ஸ் இதழ் அட்டைப்படத்துடன் கட்டுரை வெளியிட்டது.

2016ம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் போதே விவேக் ராமசாமிக்கு அரசியல் ஆர்வம் வந்தது.

அந்த தேர்தலில் டொனால்டு டிரம்பின் வெற்றி விவேக் ராமசாமிக்கு அரசியல் ஆர்வத்தை மேலும் அதிகமாக்கியது.

இந்த நிலையில் தான் 2024-ம் ஆண்டு நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிடுவதாக அறிவித்திருக்கிறார்.

இது டொனால்டு டிரம்புக்கு பெரிய அதிர்ச்சி தான். காரணம் விவேக் ராமசாமி மட்டுமின்றி குடியரசுக் கட்சியில் மட்டுமே சுமார் 10-க்கும் மேற்பட்டோர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட விருப்பமனு அளித்துள்ளனர்.

உலக அரசியல் அரங்கில் மிக உயரிய பதவி, சக்தி வாயந்த பொறுப்பை இந்திய வம்சாவளியினர் அலங்கரிப்பது அண்மை காலமாக அதிகரித்துள்ளது என்றே சொல்ல வேண்டும்.

தற்போதைய அமெரிக்க துணை ஜனாதிபதி, கமலா ஹாரிஸ், பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக், கனேடிய பாதுகாப்பு அமைச்சர் அனிதா ஆனந்த் உள்ளிட்டோரும் இந்திய வம்சாவளியினர் என்பது குறிப்பிடத்தக்கது. எழுதியவர் சௌரா

பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக்கை போல் அமெரிக்காவின் ஜனாதிபதியாவாரா இந்திய வம்சாவளியர் விவேக் ராமசாமி?

2007 இல் ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தில் உயிரியல் படிப்பை முடித்த விவேக் 2013ல் யேல் சட்டக் கல்லூரியில் பட்டம் பெற்றுள்ளார்.

# உக்ரைனைக் காப்பாற்ற மேற்குலக நாடுகளுக்கு அழைப்பு அமெரிக்க உப-ஜனாதிபதி கமலா பிரித்தானிய பிரதமர் சுனக்

உக்ரைன் மீது ரஷ்யா போர் ஆரம்பித்து ஒரு வருடமாகிறது. இன்னும் ரஷ்ய கெடு பிடி ஓய்ந்ததாக இல்லை. யுத்த வெறி பிடித்த ரஷ்ய அதிபர் புதின் "மூக்குப் போனாலும் சகுணப்பிழையாக" இருந்து வருகிறார். யுத்தத்தை விரும்பாத சகுணப்பிழைளாக இருந்து வருகிறார். யுத்தத்தை விரும்பாத ரஷ்யர்கள் நாட்டை விட்டுத் தலைமறைவானி விடுவதும், உயர் பதவிகளில் உள்ள இராணுவத்தினர் தற்கொலை செய்து கொள்வதும் செய்திகளாக வெளி வருகின்றன. ஆனால் அதிபர் புதின் பாதுகாப்பாளர் சகிதம் தூங்குகிறாராம்!



உக்ரைனில் மனித குலத்திற்குப் பாரதூரமான அக்கிரமங்களை ரஷ்யா புரிந்துள்ளதை அமெரிக்கா திட்ட வட்டமாக அறிந்துள்ளதாக அமெரிக்க உப ஜனாதிபதி கமலா ஹாரிஸ் தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளின் பாதுகாப்பு சம்பந்தமான மாநாட்டில் பல முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டதுடன் உக்ரைனுக்கு இராணுவ, பாதுகாப்பு, பொருளாதார உதவிகளை வழங்க உறுதியளித்தனர்.

ஜெர்மனியின் மூனிச் நகரத்தில் நடைபெற்ற இந்தமகாநாட்டில் கமலா ஹரிஸ் தொடர்ந்து பேசுகையில் ரஷ்யாவின் மீது பாரதூரமான குற்றச்சாட்டுக்களை ஷமன்வைத்தார்.

உக்ரைனில் பயங்கரமான நிலையில் மக்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும், சித்திரவதை செய்யப்பட்டு இருப்பதாகவும், துன்புறுத்தல். இளம் பெண்கள் கற்பழிக்கப்பட்டமை, பலாத்கார நாடு கடத்தல் போன்ற பாதகச் செயல்களை ரஷ்யா புரிந்துள்ளதாகவும் தெரிவித்த ஹரிஸ் இவற்றை எல்லாம் உலக நாடுகள் பார்த்துக் கொண்டிருப்பது வேதனை தருவதாகவும் கவலைப் பட்டார்.

இந்த அவல நிலையிலிருந்து உக்ரைன் மீட்சி பெற உலக நாடுகள் நீண்டகால உதவிகளைத் தொடர்ந்து வழங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதே மகாநாட்டில் கலந்து கொண்ட பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் உக்ரைனுக்கு தற்போது வழங்கப்படும் இராணுவ உதவிகளை இரண்டு மடங்காக அதிகரிக்க நாடுகள் முன் வர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

உக்ரைனின் பாதுகாப்பிற்கு மேற்கத்திய கூட்டு நாடுகள் இப்போதிருந்தே திட்டங்களை வகுக்க வேண்டும் எனவும், நாட்டைப் பாதுகாப்பதற்குத் தேவையான ஆயுதங்களைக் கொடுத்து உதவ வேண்டும் எனவும் மேலும் சுனக் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

# முடி கொட்டுகிறதா? இதைப் படியுங்கள்...

**வைத்தியர்**

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பார்கள். ஆனால் இன்றோ "முடியின் அழகு முகத்தில் தெரியும்" என்கிறாக்ள் தலை முடியைப் பராமரிப்பவர்கள்.

தலையில் உள்ள முடி அப்படியே உதிர்ந்து விட்டதாக அனேக மாணவர்களும் கவலைப் படுகிறார்கள். ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் கவலைப்படுகிறார்கள்.

தலையில் உள்ள முடியைப் பராமரிக்கும் முறை தெரியாமை தான் இந் முடி உதிர்வுக்கு காரணமாக இருக்கிறது. இது மட்டுமல்ல. உணவுகளிலும் தங்கியுள்ளது.

இயற்கையான பராமரிப்பினால் இந்த முடி உதிர்வைத் தவிர்க்கலாம். இதற்கான வழிமுறைகளை இங்கு தருகிறேன்.

முக்கியமாக இரும்புச் சத்துள்ள உணவைச் சாப்பிடுவதன் மூலம் முடி உதிர்வைக் கட்டுப்படுத்தலாம். கறிவேப்பிலை, முருங்கைக் கீரை பேரீச்சம்பழம் போன்றவற்றை தினமும் உட்கொள்வது நல்லது.

வெந்தயத்தை அரைத்தும், வெங்காயத்தைச் சாறாக்கியும் முடியின் வேர் வரை பூசி இளம் சூடான நீரில் கழுவ வேண்டும்.

கற்றாளைச் சாற்றை தடவி வர முடி உதிர்வு குறைவாகும். முடியும் பளபளப்பாகும்.

இப்படி இன்னும் பல இயற்கையான முறைகளினாலும் நமது முன்னோர்கள் முடியைப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள். அவற்றில் ஒன்று வாரத்திற்கு ஒரு முறை தலைக்கு எண்ணெய் வைத்து நீராடுவது.

முடியின் அடிவாரம் வரை - வேர் வரை தேய்த்து வர முடியும் வளரும்: கருமை நிறைந்த கூந்தலாகவும் மலரும்.

எண்ணெய்க் குளிப்பின் போது முடி சிறிதளவு கொட்டினாலும் பின்னர் முடி செழிப்பாக வளர்ந்து அழகு தரும்.



# இந்திய மீனவர்களுக்கு அனுமதியா?

## இலங்கை அரசின் திட்டம் இதுதான்...

பார்த்திபன்



இலங்கையின் வடபகுதிக் கடலில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்படும் என வெளியான அறிவிப்பு இலங்கை மீனவர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தமது வாழ்வாதாரத்தை முற்றாகப் பறித்துவிடும் என அவர்கள் அச்சம் வெளியிட்டிருக்கின்றார்கள்.

இலங்கை - இந்திய அதிகாரிகள் மட்டத்தில் இது தொடர்பாக பேச்சுக்கள் இடம்பெற்றிருக்கின்றது. வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி கூட இதனை நாடாளுமன்றத்தில் உறுதிப்படுத்தியிருந்தார். "வாரத்தில் இரண்டு நாட்கள் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பகுதிக்குள் வந்து மீண்பிடிக்க அனுமதி வழங்குவது தொடர்பாக ஆராய்கிறோம்" என்று அவர் அப்போது தெரிவித்திருந்தார்.

இதனை சாதாரண ஒரு செய்தியாக அமைச்சர் சொன்னாலும், இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் பாரதூரமானவை. அதனையிட்டு உணர்ந்து கொள்ளாத ஒருவராகவே அமைச்சர் இந்தக் கருத்துக்களை தெரிவித்திருந்தார்.





இந்திய மீனவர்கள் வாரத்தில் இரண்டு நாட்களுக்கு இங்கு வந்தார்கள் என்றால் வடபகுதி கடல் அவர்களுடைய கட்டுப்பாட்டுக்குள் சென்று விடும். ஏனெனில் அவர்களிடம் பெருமளவு நாட்டுப் படகுகள் இருக்கின்றன. இந்தக் காலப்பகுதியில் எமது மீனவர்கள் கடலுக்குள் செல்ல முடியாத நிலை ஏற்படும்.

இரண்டு நாட்களுக்கு வடபகுதி மீனவர்கள் தமது தொழிலை இழப்பார்கள் வடக்கில் உள்ள கடல் வளங்களை அவர்கள் அள்ளிக் கொண்டு செல்லும் நிலை தான் காணப்படும். அனுமதி கொடுக்காத தற்போதைய நிலையிலேயே இது தான் நடைபெறுகின்றது. அனுமதி கொடுத்துவிட்டால் இந்த நிலைமை மோசமடையும்.

இலங்கையின் கடற்பகுதிக்குள் தினமும் 2000, 3000 இந்திய மீன் பிடிப் படகுகள் வரும் நிலையில் அவற்றை தடுக்க முடியாதுள்ளதாக இலங்கை கடற்படையும் கூறுவதனாலேயே இவ்வாறு அவர்களுக்கு அனுமதியை வழங்கி அதற்காக ஒரு கட்டணத்தை அவர்களிடம் அறவிடுவது குறித்து ஆராய்வதாக அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருந்தார்.

இது நடைமுறைப் படுத்தப்படுமாளின் பாரதுாரமான விளைவுகளைத்தான் வடபகுதி மீனவர்களுக்கு ஏற்படுத்தும். இவ்வாறான உடன்படிக்கைகளைச்



செய்யும் போது வடபகுதி மீனவர்களின் ஆலோசனைகளைப் பெற்று புத்தி ஜீவிகள், மற்றும் இதனுடன் தொடர்புபட்டவர்களுடன் கலந்தாலோசித்துத்தான் இது தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

இது தொடர்பில் தீர்மானங்களை எடுப்பது தான் பிரச்சினையாகவுள்ளது. அரசாங்கம் இந்தியாவிடமிருந்து தமக்கு சாதகமான சில பலன்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும், வடபகுதி மீனவர்களுக்கும் தமிழக மீனவர்களுக்கும் இடையில் முரண்பாடுகளைத் தீவிரப்படுத்துவதற்காகவும் இதனை திட்டமிட்ட முறையில் செய்வதாக வடபகுதி மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றார்கள்.

இலங்கையில் நடந்த 30 வருடகால போரினால் அதிகளவுக்குப் பாதிக்கப்பட்டவர்கள் மீனவர்கள் தான். அரசாங்கத்தில் இந்த நடவடிக்கையால் சுமார் இரண்டு இலட்சம் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். வடபகுதியிலுள்ள கடல் மிகவும் சிறியது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவுஷ மன்னார் பகுதிகளில் சுமார் இரண்டு இலட்சம் மீனவர்கள் கடலை நம்பித்தான் இருக்கின்றார்கள் அவர்களுடைய வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்குவதாக இந்த திட்டம் அமையவும்.

வடபகுதி எமது மீனவர்களுக்கு தென்பகுதிக் கடலுக்குச் செல்வதற்கு முடியாது. அந்தப் பக்கத்தில் சிங்கள மீனவர்களும் கடற்படையும் அனுமதிக்க மாட்டார்கள். அதேபோல ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிப்பதற்கான வசதிகளும் வடபகுதி மீனவர்களிடம் இல்லை.

இப்போதும் கூட வாரத்தில் மூன்று நாட்கள் தென்னிந்திய மீனவர்கள் அத்துமீறி வடக்கு கடல் எல்லைக்குள் வருகின்றார்கள். இந்தக் காலப்பகுதியில் எமது மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல முடியாத ஒரு நிலை இருக்கின்றது. இதனால், எமது வளங்கள் அபகரிக்கப்படுகின்றன. இது மட்டுமல்ல, சூழல் பாதிக்கப்படுகின்றது. இவை அனைத்தும் இப்போது வழமையாகிவிட்டது.

இந்தியாவிலிருந்து தினசரி மூவாயிரத்துக்கும் அதிகமான படகுகள் வருகின்றன. வந்து எங்களுடைய வளங்களை அவர்கள் அளள்க் கொண்டு செல்கின்றார்கள். உதாரணமாக ஒரு நாளைக்கு ஒரு ட்ரோலரில் கொண்டு செல்லப்படுகின்ற இறால், கடலட்டை, நண்டு, கணவாய், மீன் என்பனவற்றின் பெறுதி இந்திய ரூபாவில் குறைந்தது 50 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்படுகின்றது.

ஒரு நாளைக்கு ஒரு படகில் இவ்வளவு வளங்கள் கொண்டு செல்லப்படுகின்றது என்றால், ஒரு நாளைக்கு வரும் 3 ஆயிரத்துக்கும் அதிகமான படகுகளில் எவ்வளவு வளங்கள் கொண்டு செல்லப்படுகின்றன?

இது அதிர்ச்சியளிக்கும் தகவல்! இதற்கான அனுமதியையும் உத்தியோகபூர்வமாக இலங்கை அரசு வழங்கி விட்டால் எமக்கு மிஞ்சப் போவது என்ன?

subara
insurance

காப்புறுதியின் காவலன் சுபரா

சுபமான வாழ்வின்
சுகமான வழிகாட்டி
சுபரா

வியாபார காப்புறுதியா!
வீட்டுக் காப்புறுதியா!!
ஆயுள் காப்புறுதியா!!!

அனைத்து
காப்புறுதிக்கும்

ஏழு ஆண்டுகளில் இரண்டாயிரத்துக்கும்
அதிகமான காப்புறுதி வாடிக்கையாளர்களுடன்
சேவையாற்றும் நம்மவர் நிறுவனம் சுபரா...

தை மாதம் 31ஆம் திகதி வரை
ஆயுள் காப்புறுதி புதிதாய் தொடங்குவோருக்கு
வீட்டுக் காப்புறுதி இலவசம்

விரும்பினால் மட்டும் அழையுங்கள்

சுபரா - இங்கிலாந்து
020 3823 1061

சுபரா - வேல்ஸ்
020 3823 1065

சுபரா - ஸ்கொட்லாந்து
020 3119 1111

SUBARA BUSINESS NETWORK HEADQUARTERS

Subara Business Centre
4, Weald Lane
Harrow HA3 5ES
London (UK)

Office Opening Hours
Monday to Friday ; 8am - 8pm
Visit by appointments only



GANESHA ASIAN SUPERMARKET
இலங்கை, இந்திய மளிகைப் பொருட்கள், பசுமையான மரக்கறிகள்,
புது வரவு பூஜை பொருட்கள், அலங்ககாரப் பொருட்கள்,
கடல் உணவு பொருட்கள், தரம்மிக்க உடன் இறைச்சி வகைகள்
அனைத்தையும் ஒரே இடத்தில் எங்கும்
இல்லாத மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
Address: 433 Bromley Rd, Bromley BR1 4PR ( UK ) | Tel - 020 - 8698 09 90
இங்கே கிடைக்கும்...
Herbul Black Henna
100% PURE
HERBUL HENNA
POWDER
100% தூய
மூலிகை மருதாணி
பவுடர்
Desyham Hair Darkening Shampoo
The safest way to color Hair
முதல் முறையாக பிரித்தானிய அரசாங்கத்தால்
அங்கீகாரம் பெற்று Noni (நோனி )
மற்றும் Olive (ஆலிவ்) மூலிகையுடன் தயாரன
Hair Darkening Shampoo
Rathi Shikakai Shampoo
மற்றும்
Rathi Onion Shampoo
விரைவில் வர உள்ளது...


BESTFOOD MEGAMART
Best Foods Mega
ONLINE
GROCERY SHOPPING
WWW.BESTFOODMEGA.CO.UK
OPEN EVERY DAY
7AM TO 11PM
74 - 80, FARNWORTH STREET,
LIVERPOOL L6 9BD
0151 2605 941
INFO@BESTFOODMEGAMART.CO.UK
இலங்கை, இந்திய மளிகைப் பொருட்கள், பசு
மையான மரக்கறி வகைகள்,பழவகைகள்,
பூஜைப் பொருட்கள், குளிர்பானங்கள், மதுபானங்கள்,
பாத்திர வகைகள், கடல் உணவுப் பொருட்கள்,
தரமானசேவையுடன் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்...
இங்கே கிடைக்கும்...
Herbul Black Henna
100% PURE
HERBUL HENNA
POWDER
100% தூய
மூலிகை மருதாணி
பவுடர்
Rathi
Shikakai Shampoo
மற்றும்
Rathi
Onion Shampoo
Desyham
Hair Darkening Shampoo
The safest way to color Hair
முதல் முறையாக பிரித்தானிய அரசாங்கத்தால்
அங்கீகாரம் பெற்று Noni (நோனி )
மற்றும் Olive (ஆலிவ்) மூலிகையுடன் தயாரான
Hair Darkening Shampoo
விரைவில்
வர உள்ளது...


SKC
EST
1992
SRIKANTH & CO.
SOLICITORS
We practice in the following areas of law:
Consumer Problems
Conveyancing - Residential
Conveyancing - Commercial
Employment Law
Housing Matters
Immigration
Landlord & Tenant
Licensing - Commercial Premises
Litigation - Civil & commercial
Matrimonial & Family law
Welfare Matters
Wills & Probate
Authorized & regulated by
the Solicitors Regulation Authority
(SRA No : 564285)
020 8795 0648
020 8795 0649
078 3119 5979
info@sirkanthsolicitors.co.uk
www.srikanthsolicitors.co.uk
THE LAW SOCIETY ACCREDITED
Conveyancing Quality
557, HIGH ROAD, WEMBLEY, MIDDLESEX, HA0 2DW

# சினிமா செய்திகள்



## பட வாய்ப்புக்காக இதை செய்ய வேண்டுமா? என அழுதேன்! குமுறிய நடிகை

90களில் அரவிந்த் சுவாமி, கமல்ஹாசன், விஜயகாந்த் போன்ற நடிகர்களுடன் ஜோடி போட்டு நடித்து பிரபலமாக வலம் வந்தவர் நடிகை ஆமனி. விஜயகாந்த் நடித்த ஹானஸ்ட் ராஜ்படத்தில் அவர் மனைவியாக நடித்தவர் தான் ஆமனி.

சினிமாவில் இருந்து விலகி சீரியல் பக்கம் சென்ற ஆமனி சமீபத்தில் அளித்த பேட்டியில், சினிமாவில் நுழைய ஆரம்ப காலத்தில் மிகவும் கஷ்டப்பட்டேன்.

வாய்ப்பு தேடும் போது சிலர் என்னிடம் ஆபாசமாக பேசினார்கள். கதை குறித்து பேச வேண்டும் என்று தனியாக அழைத்தார்கள்.

படவாய்ப்புக்காக இதை எல்லாம் செய்ய வேண்டுமா என்று நான் அதிர்ச்சி அடைந்து அம்மாவிடம் புலம்பி அசூதேன். அவர் கொடுத்த தைரியத்தால் சினிமாவில் வெற்றி பெற்றேன் என கூறியுள்ளார்.



## தல, தளபதி கத்துக்குங்கப்பா!

ஒரு படம் ஓடிவிட்டால் பல முன்னணி கதாநாயகர்கள் சம்பளத்தை ஒரேயடியாக ஏற்றுவது கோலிவுட்டில் வழக்கமானது தான்! அதுபோல ஹீரோக்கள் ரஜினியிடம் ஒரு விஷயத்தை கத்துக்கனும். அவரோட அண்ணாத்த திரைப்படம் எதிர்பார்த்த வெற்றியை பெறாததால் 100 கோடி சம்பளம் வாங்கிய அவர் ஜெயிலர் படத்துக்கான சம்பளத்தை 80 கோடியாக குறைத்து கொண்டார்.

இப்போது ஜெயிலர் படத்துக்கு எதிர்பார்ப்பு எகிறியுள்ளதால், அடுத்து ஜெய்பீம் இயக்குனர் தா.ச. ஞானவேல் இயக்கும் படத்தில் நடிக்க 105 கோடி சம்பளம் வழங்கப்பட்டுள்ளதாம்.

## சென்னை இ.சி.ஆரில் புதிய வீட்டை கட்டும் நடிகர் ரஜினிகாந்த்



சென்னை கிழக்கு கடற்கரை (ECR) சாலையில் நடிகர் ரஜினிகாந்த் புதிய வீடொன்றை கட்டி வருவதாக சினிமா வட்டாரங்களில் பேசப்பட்டு வருகிறது.

ரஜினிகாந்த் புதிய வீட்டை நிர்மாணித்து வரும் இடத்திற்கு அருகில் நடிகர் விஜய், ஜெயம் ரவி போன்ற பிரபலங்களின் வீடுகளும் அமைந்துள்ளன. நடிகர் ரஜினிகாந்த் அண்மையில் புதிய வீட்டை நிர்மாணிப்பதற்கான பூமி பூஜையையும் நடத்தியுள்ளார்.

அதேவேளை ரஜினிகாந்தின் மற்றைய வீடு அமைந்துள்ள சென்னை போயஸ் கார்டனில் நடிகரும் ரஜினிகாந்தின் மருமகனுமான தனுஷ் புதிய பிரமாண்ட வீட்டை கட்டி அதனை அவரது பெற்றோரான கஸ்தூரிராஜா தம்பதிக்கு பரிசளித்துள்ளார். அண்மையில் வீட்டின் கிரக பிரவேசம் நடைபெற்றது.

# BEAUTY COMPLEX EUROPE LTD

# GERMANY *Products*







**SHOP**

Beauty Complex Europe Ltd, Unit 8, Chandani Bazar,
29 / 33, Ealing Road, wembley, Middlesex HA0 4YA, London ( UK ).

**ONLINE மூலம் பெற்றுக்கொள்ள...**

www.beautycomplex.co.uk | info@mybeautycomplex.com

Tel - 00 44 ( 0 ) 208 900 10 91 | Mob : +44 - 7495460110




# SRI NAVADHURGAI AMMAN TEMPLE



**MITCHAM**
Founded in 2017

**2023**

**ABISHEKAMS:**
Daily 6:30 PM

**SPECIAL ABISHEKAMS**
Tuesdays & Fridays,
Auspicious Days &
other days by request

11:00 am and 6:30 pm

**TEMPLE OPENING HOURS**
**MONDAY - SUNDAY**
**Morning**
9:30 am - 1:30 pm
**Evening**
5:30 pm - 9:30 pm
**Poojas Daily**
10:00 am, 12:00 pm
7.30 pm, 9:30 pm

45C, Crusoe Road, Mitcham,
London, UK, CR4 3LJ
Telephone: 020 8640 5060
Web: www.navadhurgaiammantemple.co.uk


BEAUTY COMPLEX EUROPE LTD
Desyham
Hair Darkening Shampoo
The safest way to color Hair
முதல் முறையாக பிரித்தானிய
மற்றும் ஐரோப்பிய தர சான்றிதழுடன் Japan
தொழில் நுட்பத்தில் Noni மற்றும் Olive
மூலிகையுடன் தயாரன Shampoo வடிவில்
ஓர் Hair Dye
BLACK
AMMONIA FREE
Couleur des cheveux - Noir
Haarfarbe - Schwarz
Haarkleur - Zwart
Hårfarve - Sort
DESYHAM
HAIR DARKENING SHAMPOO
பிரஷ் அவசியம் இல்லை 5 நிமிடத்தில்
கருமை நிறம் ஊட்டும் Desyham Hair Darkening Shampoo
5 MINUTE HAIR COLOR
பிரித்தானிய மற்றும்
ஐரோப்பா எங்கும் பரப்பரப்பாக
விற்பனையாகின்றது
UK Regulation 2009 / 1223 & the Cosmetic Products Enforcement Regulations 2013
Beauty Complex Europe Ltd
est autorisé en tant qu'importateur et Distributeur pour la région EU.
EU
EU Registered - 2800597
Marketing Executive (சந்தைப்படுத்துவோர்)
BEAUTY COMPLEX EUROPE LTD
Unit 8, Chandani Bazar 29 / 33, Ealing Road, Wembley
Middlesex HA0 4YA London ( UK )
Tel - 00 44 (0) 208 900 10 91 | M- 00 44 (0) 77 10 64 63 59
E - info@mybeautycomplex.com | W - www.beautycomplex.co.uk
SUBASH EUROPEAN LTD
38, Rue Dunois Paris 75647, Cedex 13 France
Tel - 065 28 27 303 / 066 96 67 571
MILANO SAREES ESSENCE OF ELEGANCE
Via Largo dei Gelsomini 12 20146 Milano, Italy
Tel - 32 800 58 737
TMT ASIAN FOOD
Bunzstrasse - 4 5610 Wohlen Switzerland
Tel - 056 611 95 85 / 078 748 16 89
STAR IMPEX
Lebensmittel Grosshandel Franziusstrasse-150 ( TOR 3 )
DE - 44147 Dortmund Germany
Tel - 0231 860 26 96 / 01 72 218 37 03
AYNKARAN STORES
Ostervold 5 8900 Randers Denmark
Tel - 45 48 44 40 13 / 45 26 11 09 05
ESAN BEAUTY COMPLEX
8887, The Gore Road, Brampton Ontario L6P 2K9, Canada
Tel - 90 59 15 25 15 | 416 45 02 515
E - Esancomplex8887@gmail.com
WWW.BEAUTYCOMPLEX.CO.UK

# Herbul Black Henna

இங்கிலாந்து, ஐரோப்பா, சுவிற்சர்லாந்து மற்றும் கனடா மக்களுக்கு ஓர் நற்செய்தி

HERBUL BLACK HENNA வின்
புகழைப் பயன்படுத்தி போலிகள் சந்தையில் வந்துள்ளன.



இயற்கை மூலிகையிலும், மருதோண்டி
இலைகள் கொண்டு தயார் ஆன Herbul Black Henna
இப்போது புதிய வடிவிலான பாக்கட்டுகளில் வந்துள்ளன.

Original Herbul Black Henna வாங்கும் போது
Beauty Complex Europe Ltd முத்திரையும், இங்கிலாந்து மற்றும்
ஐரோப்பா அரசாங்கத்தில் அங்கிகாரம் பெற்ற முத்திரையும்
உள்ளதா என கவனித்து வாங்கவும் போலிகளை வாங்கி ஏமாறதீர்கள்...

**OLD BOX**




vieille boite alte Schachtel
gammel kasse

புதிய வடிவிலான பெட்டி
**New Box**




nouvelle boite
neue Kiste Ny æske

The Safest Way To Colour Hair

Beauty Complex Europe Ltd is Authorised as an importer & Distributor for the United Kingdom
UK Regulation 2009 / 1223 and the Cosmetic Products Enforcement Regulations 2013

**Marketing Executive (சந்தைப்படுத்துவோர்)**

BEAUTY COMPLEX EUROPE LTD
Unit 8, Chandani Bazar 29 / 33, Ealing Road, Wembley
Middlesex HA0 4YA London ( UK )
Tel - 00 44 (0) 208 900 10 91 | M- 00 44 (0) 77 10 64 63 59
E - info@mybeautycomplex.com | W - www.beautycomplex.co.uk

SUBASH EUROPEAN LTD
38, Rue Dunois Paris 75647, Cedex 13 France
Tel - 065 28 27 303 / 066 96 67 571

MILANO SAREES ESSENCE OF ELEGANCE
Via Largo dei Gelsomini 12 20146 Milano, Italy
Tel - 32 800 58 737

TMT ASIAN FOOD
Bunzstrasse - 4 5610 Wohlen Switzerland
Tel - 056 611 95 85 / 078 748 16 89

STAR IMPEX
Lebensmittel Grosshandel Franziusstrasse-150 | TOR 3 |
DE - 44147 Dortmund Germany
Tel - 0231 860 26 96 / 01 72 218 37 03

AYNKARAN STORES
Ostervold 5 8900 Randers Denmark
Tel - 45 48 44 40 13 / 45 26 11 09 05

ESAN BEAUTY COMPLEX
8887, The Gore Road, Brampton Ontario L6P 2K9, Canada
Tel - 90 59 15 25 15 | 416 45 02 515
E - Esancomplex8887@gmail.com

WWW.BEAUTYCOMPLEX.CO.UK